பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 13 செவ்வாய்க்கிழமை (30-10-2001)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:338

# கொழும்பு நாரஹென்பிட்டியவில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

## கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட நால்வர் உடல் சிதறிப் பலி!

கொழும்பு,ஒக்ரோபர்30

**கொழும்பு நாரஹென்பிட்டியப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றில் பொலீஸ் கான்ஸ்டபிள் உட்பட நால்வர் உடல் சிதறிப் பலியாகினர். ஓர் இன்ஸ்பெக்டர், ஒரு சப் இன்ஸ்பெக்டர், ஒரு கான்ஸ்டபிள் உட்பட 15பேர் காயமடைந்தனர். அவர்களில் எண்மரின் நிலை மோசமாக இருந்தது. உயிரிழந்த நால்வரில் தற்கொலைக் குண்டுதாரியும் ஒருவர்.**

நாரஹென்பிட்டிய, சித்ரா லேனை அண்டிய அண்டாசன தொடர் மாடிக்கு அருகிலேயே பிற்பகல் 2.30 மணியளவில் குண்டு வெடித்துள்ளது. குண்டுச் சத்தம் கொழும்பு நகரின் பல பகுதிகளிலும் கேட்டது.

குண்டுதாரியின் இலக்கு எது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

நேற்று முற்பகல் அப்பகுதியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க பங்கு பற்றினார். அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் குண்டு வெடித்தது.

குண்டுதாரியின் இலக்கு பிரதமராக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

சம்பவத்தை அடுத்து அப்பகுதி பாதுகாப்பு வலயமாக வரையறுக்கப்பட்டது. விசேட பொலீஸ், இராணுவ அணிகள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டன. பொலீஸார் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மதுறுஓயா குளத்தருகே கிளைமோர் தாக்குதல்

### 3மீனவர் பலி; சிப்பாய் காயம்!

கொழும்பு,ஒக்.30

பொலநறுவை மதுறுஓயா பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கி மோதல் மற்றும் கிளைமோர் தாக்குதல் சம்பவங்களில் 3 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் சிப்பாய் ஒருவரும் காயமடைந்தார்.

கந்தேமுவ கிராமத்தில் இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் தாக்கியதாகவும் -

அப்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் மதுறுஓயாவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மூவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

முதலில் துப்பாக்கி மோதல் இடம்பெற்றதாகவும் -

இதனையடுத்து அப்பகுதிக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

### பதில் ஜனாதிபதியாக ரத்னசிறி பதவியேற்பு

கொழும்பு,ஒக்.30

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றதை அடுத்து பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க பதில் ஜனாதிபதியாக பிரதம நீதியரசர் சரத் என். சில்வா முன்னிலையில் நேற்றுக்காலை பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

பிரதி அமைச்சர் மங்கள சமரவீர நிதி, திட்டமிடல் பதில் அமைச்சராகவும் -

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை பாதுகாப்பு பதில் அமைச்சராகவும் -

பதில் ஜனாதிபதி ரத்னசிறி விககிரமநாயக்கா முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

(உ)

## மூதூர் நகரத்தில் பதற்றம் நீடிப்பு!

மூதூர்,ஒக்.30

தமிழர் - முஸ்லிம்களுக்கு இடையேயான மோதல்களை அடுத்து, மூதூரில் கடந்த இரண்டு தினங்களாக நிலவும் பதற்றநிலை காரணமாக நேற்று இரண்டாவது நாளாக மூதூர் நகரம் வெறிச்சோடிக் கிடந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அங்கு யுத்த நிலை தொடர்கின்றது.

புனித அந்தோனியார் மகாவித்தியாலயம், மெதடிஸ்த தேவாலயம், அரபிக் கல்லூரி என்பனவற்றில், தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த சுமார் 600 குடும்பங்கள் பாதுகாப்புக்காகத் தங்கியுள்ளனர்.

பாடசாலைகள், அரசு அலுவலகங்கள் போன்றவை பெரும்பாலும் இயங்கவில்லை.

மூதூர் நகரில் தற்போதைய பதற்ற நிலைக்கு முடிவுகாணும் வகையில் சர்வமத குருமார், அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படை, பொலீஸ் உயர் அதிகாரிகள் பங்குபற்றிய சமாதான மாநாடு ஒன்று

(12ஆம் பக்கம் பார்க்க)

### மூதூர் நிலைவரம்:

## தமிழர்கள் மீதான தாக்குதலை பொறுத்துக் கொள்ள முடியாது

### விடுதலைப் புலிகள் அறிக்கை

திருகோணமலை,ஒக்.30

முஸ்லிம் மக்கள் தமது எதிரிகள் அல்லர் என்றும் -

அதேவேளை தமிழ் மக்கள் மீது இஸ்லாமியக் காடையர்கள் நடத்தும் உயிர்ப்பலி வாங்கும் நடவடிக்கைகளை பொறுத்துக்கொள்ளப் போவதில்லை என்றும் -

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மூதூரில் தமிழ் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்டுள்ள பதற்றம் தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்கள் மீது முஸ்லிம் காடையர்கள் கும்பலாகச் சென்று தாக்குதல் நடத்துவதை ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

தம்மிடையே உலவும், காடையர்களை இனம் கண்டு, தமிழ் மக்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுக்கு தனிநாடு வழங்குவதற்கு ஐ.தே.க. சம்மதித்துள்ளது என்கிறார் ஜனாதிபதி

## பி.பி.ஸி. பேட்டியில் அவர் தெரிவிப்பு

லண்டன்,ஒக்.30

"விடுதலைப் புலிகளுக்கு தனிநாட்டைத் தருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி சம்மதித்துள்ளது. இதன்



காரணமாகவே அந்தக் கட்சி ஆட்சிக்கு வரும்போது பேசுவதற்கு புலிகள் விரும்புகின்றனர்; பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் பேச்சுக்குவர அவர்கள் தயங்குகின்றனர்"

- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

லண்டன் விஜயம் செய்திருக்கும ஜனாதிபதி குமாரதுங்க அங்கு பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே இப்படிக் கூறியிருக்கின்றார். அந்தப் பேட்டியில் அவர் கூறிய முக்கிய கருத்துக்கள் வருமாறு:-

*கேள்வி:-* பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை இழந்ததற்கும், நாட்டில் மீண்டும் தேர்தல்கள் நடைபெறும் சூழல் ஏற்பட்டிருப்பதற்கும் என்ன காரணம்?

*ஜனாதிபதி:-* பொ.ஐ.மு. அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்ததால், அது நாட்டில் பொது மக்களின் ஆதரவையும் இழந்து விட்டதாக அர்த்தமில்லை. சில மனிதர்கள் செய்த சூழ்ச்சி அரசியலின் காரணமாகவே நாடாளுமன்றத்தில் பொ.ஐ.மு. அரசு பதவியிழந்தது. அதையடுத்து நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தல் மூலமாக மக்களிடமிருந்து புதிய ஆணை ஒன்றைப் பெறவேண்டிய நிலை பொ.ஐ. முன்னணிக்கு ஏற்பட்டது.

*கேள்வி:-* தங்கள் கணவர் விஜே குமாரதுங்கவை கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஜே.வி.பியுடன் தாங்கள் அரசியல் இணக்கப்பாடு கண்டது ஏன்?

*ஜனாதிபதி:-* விஜேகுமாரதுங்கவின் கொலையை ஜேவிபி. செய்யவில்லை. அவரைக் கொன்றது ஐதே.கட்சிதான். ஐ.தே.கட்சி இந்தக் கொலைக்காக சில ஜே.வி.பி. கொலைகாரர்களைப் பயன்படுத்தியது. ஜே.வி.பி. அமைப்பு இப்போது மாறியிருக்கிறது. ஜே.வி.பியின் பழைய தலைவர்கள் ஐ.தே.கவினாலேயே பின்னர் கொல்லப்பட்டனர். இப்போது ஜே.வி.பி. அமைப்பை புதிய தலைவர்கள் - இளைஞர்கள் - தலைமையேற்று நடத்துகின்றனர். தாங்கள் வன்முறைப் பாதையை விட்டு விலகி வந்துவிட்டதாக ஜே.வி.பியினர் கூறுகின்றனர். கடந்த 6 அல்லது 7 ஆண்டுகளாக ஜனநாயக அரசியல் பாதைகளைத்தான் ஜே.வி.பி. பின்பற்றுவதாகத் தெரிகிறது.

மேலும் ஜே.வி.பிக்கும் பொ.ஐ.முன்னணிக்கும் ஏற்பட்ட இணக்கப்பாட்டின்படி, ஜே.வி.பி. நாடாளுமன்றத்தில் பொ.ஐ.முன்னணியை ஆதரிக்க வேண்டும். அதேவேளை விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவரும் பொ.ஐ.முன்னணியின் முயற்சி தொடரும். இந்தப் படுமோசமான யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று ஜே.வி.பிக்குக் கூறப்பட்டது.

பேச்சுக்கள் தொடரும் என்று கூறியதை ஜே.வி.பியினர் முழுமையாக ஏற்றுக்கொண்டனர்.

மேலும் பரீட்சார்த்த ஆதரவுக் காலமான ஒரு வருடத்தில் - விடுதலைப் புலிகள் பேச்சு மேசைக்கு வரும் பட்சத்தில் - பொ.ஐ.முன்னணி விரும்பியபடி ஒரு புதிய அரசமைப்பு ஏற்பாட்டை உருவாக்க முயற்சி எடுக்கப்படும் என்று ஜே.வி.பிக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

*கேள்வி:-* விடுதலைப் புலிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நேற்று இடம்பெற்ற புனரமைக்கப்பட்ட யாழ்.பஸ்நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரை முதலாவது படத்திலும், முறையே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன், வடபிராந்திய போக்குவரத்து முகாமையாளர் எஸ்.மாணிக்கவாசகர் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: கொனிகா கலர் லாப்)*

# பிரிட்டனின் அகதி முகாம்கள் நேற்று முதல் விஸ்தரிப்பு

## உதவித் தொகைக்கான 'வவுச்சர்' முறையும் ரத்து

லண்டன்,ஒக்.30

பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசிக்கும் அகதிகளை தங்க வைப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள முகாம்களை விஸ்தரிக்கும் நடவடிக்கை நேற்று திங்கட்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டது.

குடிவரவுச் சட்டத்தில் பல மாற்றங்களை மேற்கொள்வதாக அறிவித்த பிரிட்டிஷ் உள்துறை அமைசர் டேவிட் பிளங்கெற், அவற்றில் ஒன்றாக அகதி முகாம்களின் எண்ணிக்கையை நேற்று முதல் அதிகரிப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன் புகலிடம் தேடி வருவோருக்கு வழங்கப்படும் 'வவுச்சர்' முறைமையும் ரத்துச் செய்யப்படுகிறது. அத்துடன் தஞ்சமடைவோரின் விண்ணப்பங்கள் துரிதமாகப் பரிசீலிக்கப்பட்டு அநேகமானோர் பிரிட்டனில் இருந்து வெளியேற்றப்படுவார்கள் எனவும் பிளங்கெற் தெரிவித்தார்.

அதேசமயம், துறைமுகம் மற்றும் விமான நிலையமூடாகப் பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக நுழைவோர் சட்டரீதியாக கிறீன்காட் பெற விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் வேலைக்கு ஆள்கள் தட்டுப்பாடாக இருக்கும். நிர்மாணத்துறை, உல்லாசப்பயணத்துறை, பண்ணைகளில் தொழில் பார்க்க விண்ணப்பிக்க முடியும்.

பொருளாதார நோக்குடன் பிரிட்டனுக்குள் நுழைவோரை மனிதாபிமான முறையில் நடத்துவதற்கு அமெரிக்காவில் நடைமுறையிலுள்ள கிறீன்காட் முறைமை உகந்ததென்பது பிளங்கெற்றின் நம்பிக்கையாகவுள்ளது.

அத்துடன்,சட்டவிரோதமாகக் குடியேற்றவாசிகளை அனுப்பிவைக்கும் வர்த்தக நடவடிக்கைக்கும் இதன் மூலம் முடிவு கட்டலாம் என அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் சிவில் உரிமை அமைப்புக்கள் டேவிட் பிளங்கெற்றின் திட்டத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. புகலிடம் தேடி வருவோரை தங்க வைக்கும் முகாம்கள் சட்டரீதியற்றவை என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. அதன்பின் அந்தத் தீர்ப்பை எதிர்த்து உள்துறை அமைச்சு மேன்முறையீடு செய்திருந்தது.

அதேசமயம், குடியேற்றவாசிகள் ஆங்கிலம் கற்கவேண்டும் எனவும பிளங்கெற் தெரிவித்துள்ளார். மொழிப் பரீட்சையில் சித்தியடைந்த பின்பே பிரஜாவுரிமை வழங்கப்படும் என்ற ரீதியிலும் அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

(ஒ)

# தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு யாழ். ஆயரிடம் ஆசி பெற்றது

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கூட்டமைப்பாக இணைந்து போட்டியிடும் நான்கு தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்கள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சந்தித்து ஆசியைப் பெற்றுக்கொண்டனர்.

அப்போது அவர்களுடன் உரையாடிய ஆயர் நான்கு தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிடுவதை தமிழ் மக்கள் விருப்பத்துடன் வரவேற்பதாகவும் -

ஈழத்தமிழர்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு குரல் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இச்சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி, வல்வெட்டித்துறை நகர சபைத்தலைவர் கே.சிவாஜிலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணித்தலைவர் சுரேஷ பிரேமச்சந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, எஸ்.குலநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஒ-ரி)

# தபால் மூல வாக்குச்சீட்டுகள் நவ.12ஆம் திகதி வந்து சேரும்

யாழ்ப்பாணம்,ஒக்.30

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுகள் அடுத்த மாதம் 12ஆம் திகதி குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

குடாநாட்டில் தபால் மூலம் வாக்களிப்போர் அடுத்த மாதம் 20ஆம் திகதிக்கு முன்பாக வாக்குச்சீட்டுக்களைப் பெற்று, அவற்றில் முத்திரையிட்டு, மீண்டும் தமக்கு அனுப்பிவைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராஜா தெரிவித்தார். (ஒ-180)

# செய்தித் துளிகள்

### நூல் விமர்சனமும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம்.ஒக்.30

சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நடத்தும் நூல் விமர்சனமும் கலந்துரையாடலும் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும்.

ஏ.ஜே.கனகரட்னாவின் 'மத்து', 'செங்காவற் படையின் தலைவர் யேசுநாதர்' ஆகிய நூல்களுக்கான விமர்சன உரைகளை பேராசிரியர் ஆ.சண்முகதாஸ், கவிஞர் இ.முருகையன் ஆகியோர் வழங்குவர். (க-ரி)

### கரவெட்டியில் மாணவனை காணவில்லை

நெல்லியடி,ஒக்.30

கரவெட்டி யார்க்கரு மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் ஒருவரை இம் மாதம் 24 ஆம் திகதி முதல் காணவில்லை என்று அவரது பெற்றோரால் நெல்லியடியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கரவெட்டி கிழக்கு, காட்டுப்புலத்தைச் சேர்ந்த செல்வராசா செந்தமிழ் திருச்செல்வம் (வயது 17) எனபவரே காணாமற்போயுள்ளவராவார்.

(ஒ-109)

### விஞ்ஞான சங்க கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்துய விஞ்ஞான பிரிவினரின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு "மனிதனின் தோற்றமும் தாவர விலங்கு வகைகளின் மறைவும்" என்பது பற்றி க.சி.குகதாசன் கருத்துரையாற்றவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக பௌதிக துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-6)

### உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த மாதம்

கொழும்பு,ஒக்.30

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்தமாதம் வெளியாகும் என பரீட்சைத் திணைக்களம் நேற்றிரவு அறிவித்தது.(ஒ-4)

### சதுரங்க, பட்மின்ரன் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்கள் சதுரங்கச் சுற்றுப்போட்டி . இன்று காலை 9 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்றும் -

பெண்களுக்கான பட்மின்ரன் சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு சென்.ஜோன்ஸ் அக்கடமியில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10-ரி)

### மண்டைதீவில் பெருமளவில் கடற் சங்குகள்

குருநகர்,ஒக்.30

மண்டைதீவுக் கடற்பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை சுமார் 30ஆயிரம் ருபா பெறுமதியான கடற்சங்குகள் பிடிக்கப்பட்டதாக குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

நீண்டகாலமாக மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்ட கடற்பகுதிக்கு நேற்று அனுமதிக்கப்பட்ட மீனவர்களே பெருமளவில் கடற்சங்குகளைப் பிடித்தனர். (ஒ)

### 'இலங்கை வானொலி' வி.சுந்தரலிங்கம் காலமானார்

கொழும்பு,ஒக்.30

இலங்கை வானொலியின் முன்னாள் செய்தி வாசிப்பாளரும் அறிவிப்பாளரும் தயாரிப்பாளருமான வி. சுந்தரலிங்கம் நேற்றுத் தனது 62 ஆவது வயதில் ஆஸ்திரேலியாவில் காலமானார்.

இலங்கையில் நாடாளுமன்ற மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றியுள்ள இவர் பின்னர் பி.பி.ஸியின் இந்தியச் செய்தியாளராகவும் பணியாற்றினார். (ஒ-4)

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

வட்டுக்கோட்டை அரசடிப் பிள்ளையார் ஆலய மஹாகும்பாபிஷேக தின அஷ்ரோத்தர சத (108) சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8மணிக்கு நடைபெறும். நண்பகல் மகேஸ்வர பூசை இடம்பெறும்.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் பூசை, வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் திருவீதியுலா வருவார். (க)

# கூட்டமைப்பின் உறுதி கண்டு ஈ.பி.டி.பியினர் அஞ்சுகின்றனர்!

## சிவாஜிலிங்கம் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஒக்.30

நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் பலம் கண்டு ஈ.பி.டி.பியினர் அஞ்சுகின்றனர். அவர்களுக்கு இந்தத் தேர்தல் மூலம் நல்ல பாடம் புகட்டுவோம். இதனால் அவர்களது அரசியல் வாழ்வு அஸ்தமனமாகப் போகிறது.

தமிழர் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளரும் வல்வை நகர சபைத் தலைவருமான கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரான்லி வீதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

எமது மக்களுக்குத் தற்பொழுது தேவையானது நிரந்தர சமாதானம் மட்டுமே. அந்த நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் போராடக்கூடிய பலமான அணியை ஏற்படுத்தவேண்டும். அவ்வாறான பலமான அணியை ஏற்படுத்தி நிரந்தர சமாதனத்தை பெற்றுக்கொள்வதற்காகவே நாங்கள் கூட்டுச்சேர்ந்தோம்.

நாங்கள் தோற்கலாம்; ஆனால் எமது இனம் தோற்கக்கூடாது. எமது இனத்தின் நன்மை கருதி தனிப்பட்ட கட்சி நலன்களைக் கைவிட்டு கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இதன்மூலம் ஈ.பி.டி.பியின் விபச்சாரா அரசியலுக்கு முடிவுகட்டவேண்டும். மக்களின் ஏழ்மை நிலையைப் பயனபடுத்தியே ஈ.பி.டி.பியினர் உயிர் வாழ்கின்றனர். யாழ்.குடாநாட்டில் பித்தலாட்டமான நிர்வாகத்தை நடத்தி வரும் அவர்களுக்கு இத்தேர்தல் மூலம் பாடம் புகட்டி எமது கூட்டமைப்பு 9ஆசனங்களையும் கைப்பற்றும் - என்று தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் முதன்மைவேட்பாளருமான வீ. ஆனந்தசங்கரி தெரிவித்ததாவது:-

ஒரு கட்சியை ஆட்சியில் அமர்த்துவது கூட்டமைப்பின் நோக்கமல்ல. எந்தக் கட்சி எமது மக்களின் நிலைப்பாட்டை ஏற்று நடக்கிறதோ அக்கட்சிக்கு எதிரணியில் இருந்து ஆதரவு நல்குவோம். கடந்த காலங்களில் பலராலும் ஏமாற்றப்பட்ட நாம் இனியும் ஏமாறமாட்டோம்.

எமது இனத்தின் தேவை கருதி ஏற்படுத்தப்பட்ட கருத்தொற்றுமைப்பாட்டிற்கு இணங்கவே நாம் கூட்டுச்சேர்ந்தோம். நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் அரச ஊழியர்கள் நீதி, நியாயமாகச் செயற்படவேண்டும். முறையற்ற தேர்தல் நடைபெற யாரும் இடமளிக்கக்கூடாது - என்றார்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**

ஈ.பி..ஆர்.எல்.எவ். சுரேஷ் அணிப் பிரமுகர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அங்கு கூறியதாவது:-

தமிழ் மக்களுக்காகப் பேசக்கூடியவர்கள் விடுதலைப்புலிகள் மட்டுமே. அவர்களுடன்தான் அரசாங்கம் பேசவேண்டும். நாடாளுமன்றில் வலுவான தமிழ் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தவேண்டுமாயின் வடக்கு - கிழக்கிலிருந்து நல்லதோர் அணியை மக்கள் தெரிவுசெய்ய வேண்டும். அதன் மூலமே சர்வதேச ரீதியாக தமிழ் மக்களின் குரலை வலுவாக ஒலிக்கச் செய்யமுடியும். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான களத்தை உருவாக்கிக் கொடுக்கவும் முடியும். இதற்குத் தமிழ் மக்களின் முழுப் பங்களிப்புத் தேவை. நடைபெறவுள்ள தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடைய அனைவரும் வாக்களிக்கவேண்டும். வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்துத் தமிழ் மக்களும் ஒருமுகமாகத் தமது வாக்குகளைச் செலுத்தவேண்டும் - என்றார்.

**ரவிராஜ்**

யாழ். மாநகரசபை மேயரும் யாழ்.மாவட்ட வேட்பாளருமான ந. ரவிராஜ் பேசுகையில் - யார் தமது பிரதிநிதிகள் என்று மக்கள்தான் தீர்மானிக்கவேண்டும். அதைவிடுத்து குறிப்பிட்ட ஒரு கட்சி தாமே மக்கள் பிரதிநிதிகள் என்றும் ஏனைய கட்சிகளை திருவிழாக்காலத்தில் மூடை முடிச்சுக்களுடன் வந்து கடை திறந்து வியாபாரம்.செய்வோர் என்றும் வர்ணித்திருக்கிறது. இந்தக் கூற்றுக்கு மக்களின் பதில் விரைவில் கிடைக்கும் - என்று தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமாகாராசா, வேட்பாளர்களான க.சந்திரராசா, வி.ஜி.தங்கவேல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(ஐ-10)


## கண்ணீர் அஞ்சலி



எம்முடன் பணியாற்றும்
எமது சக ஊழியரான
திரு.எஸ்.சுந்தரகுமார்
அவர்களின் அன்புத் தந்தையார்

**கே.சுந்தர்ராஜா**

அவர்கள் நேற்று (29.10.2001) திங்கட்கிழமை காலமானதையிட்டு மிகவும் கவலையடைகிறோம். அன்னாரின் மறைவினால் துன்புறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம்!

*அமரரது ஆத்மா சாந்தி அடைவதாக!*

**உதயன் பணிமனை**
**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (C/18898)

**- சக ஊழியர்கள்.**

## அமெரிக்காவுக்கு எதிரான போரில்

# தலிபான்களுடன் இணைய 9000 பாகிஸ்தானியர் தயார்

## எல்லையில் காத்திருக்கின்றனர்

இஸ்லாமாபாத்,ஒக்.30

தலிபான்களுடன் இணைந்து அமெரிக்காவுக்கு எதிராகப் போரிட ஆயுதம் தாங்கிய ஆயிரக்கணக்கான பாகிஸ்தான் இளைஞர்கள் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் ஆப்கானுக்குள் நுழைவதற்காகக் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்களான இவர்கள் அனைவரும் தமது சுயவிருப்பின் பேரிலேயே தலிபான்களுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர்.

சுமார் 9 ஆயிரம் பேர் வரையில் இவ்வாறு எல்லையில் காத்திருப்பதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களுடன் எல்லைப் பகுதிக்கு வந்திருந்த முஸ்லிம் மதத் தலைவர்கள், தலிபான் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக ஏற்கனவே எல்லை தாண்டி ஆப்கானிஸ்தானுக்குள் சென்றுள்ளனர்.

இந்த ஆயுதக் குழுவினர் ஆப்கானிஸ்தானுக்குள் செல்வதைத் தாம் தடுக்கப் போவதில்லை என்று பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ம-6)



பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் அஞ்சலிக்காக தேவாலயத்தின் உள்ளே வைக்கப்பட்டுள்ள காட்சி. வலதுபக்க மூலையில் படுகொலை இடம்பெற்ற தேவாலயத்தின் முகப்புத் தோற்றம்.

தீவிரவாதிகளின் இந்தத் தாக்குதலில் உயிரிழந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 18ஆக உயர்ந்துள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

# பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் ஆப்கானிஸ்தானில் அதிகரிக்கின்றன!

காபூல்,ஒக்.30

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திவரும் விமானத்தாக்குதல்களில் பொதுமக்களின் குடியிருப்புகள் தாக்கப்படுவது அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலிபான்களின் இலக்குகள் மீது அமெரிக்கா தொடர்ந்து நான்காவது வாரமாகவும் தாக்குதல்கள் நடத்திவரும் வேளையில் பொதுமக்களின் உயிரிழப்புக் குறித்து அதிகளவில் கவலை தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதல்களில் 18 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை தலைநகர் காபூலில் உள்ள குடியிருப்புக்கள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியதில் 10 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் நால்வர் குழந்தைகள்.

சனிக்கிழமையன்று நடந்த தாக்குதல்களில் தலிபான்களுக்கு எதிரான வடக்குக் கூட்டணியின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புகள் தாக்கப்பட்டன.

மூன்று நகரங்களில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல்களில் 8 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

விமானத் தாக்குதல்களினால் பொதுமக்கள் கொல்லப்பட்டுவருவது அமெரிக்கா மீது அழுத்தங்களை ஏற்படுத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



அமெரிக்கத் தாக்குதலில் உயிரிழந்த தனது குழந்தையின் சடலத்தின் முன்பாக இருந்து அழும் தந்தை.

"கூடியவரையில் எமக்குக் கிடைத்த சரியான தகவல்களின் அடிப்படையிலேயே தாக்குதல் இலக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டன" - என்று அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

நேற்றுத் திங்கட்கிழமையும் அமெரிக்க விமானங்கள் தலிபான் இலக்குகள் மீது கடும் தாக்குதல்களை நடத்தின.

ஆப்கான் - தஜிகிஸ்தான் எல்லைப் பகுதி மலைத்தொடர்களில் உள்ள தலிபான் இலக்குகள் மீது முதற்றடவையாக அமெரிக்க விமானங்கள் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

வடக்குக் கூட்டணியினர் தலைநகர் காபூலை நோக்கி முன்னேறுவதற்கு வசதியாக தலிபான்களின் முன்னரங்க நிலைகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதேவேளை -

அடுத்தமாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ள முஸ்லிம்களின் புனித மாதமான றமழான் காலப்பகுதியிலும் அமெரிக்கத் தாக்குதல்கள் தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதை அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் கோடி காட்டினார்.

"கடந்த பல வருடங்களில் தலிபான்களும் எதிரணிப் படையினரும் ரமழான் காலப் பகுதியில் யுத்தத்தில் ஈடுபட்டுவந்தனர் என்பதை முஸ்லிம் நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்" - என்று அவர் தெரிவித்தார்.

(ம)

# அமெ., பிரிட்டிஷ் முஸ்லிம்களும் காபூல் மீதான தாக்குதலில் பலி!

இஸ்லாமாபாத்,ஒக்.30

ஆப்கான் தலைநகர் காபூல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று பிரிட்டிஷ் பிரஜாவுரிமையுடைய முஸ்லிம்களும் இரு அமெரிக்கப் பிரஜாவுரிமையுடைய முஸ்லிம்களும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஐவரும் அமெரிக்காவுக்கு எதிராகப் போரிடுவதற்காக ஆப்கானிஸ்தானுக்கு வந்திருந்தார்கள் என்று இஸ்லாமியக் குழு ஒன்று நேற்று இஸ்லாமாபாத்தில் தகவல் வெளியிட்டது.

பிரிட்டிஷ் முஸ்லிம்களில் இருவர் லூட்டனில் இருந்தும் மூன்றாவது நபர் கிராலியில் இருந்தும் வந்ததாக 'அல் முகாஜிரோ' என்ற அந்த அமைப்பின் தலைவர் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்தார்.

இறந்ததாகக் கூறப்படும் இரு அமெரிக்கர்களின் அடையாளம் குறித்து இருவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

(ம)



அமெரிக்கத் தாக்குதல்களில் இருந்து தப்புவதற்காக பாகிஸ்தான் நோக்கித் தமது வாகனத்தில் தப்பிச் செல்லும் ஆப்கானியக் குடும்பம்.

# ஆப்கான் மீதான தாக்குதல் அடுத்த வருடமும் தொடரும்

## பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்கள் அடுத்த வருடமும் தொடரும சாத்தியங்கள் இருப்பதாக பிரிட்டிஷ் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜிவ் ஹோன் தெரிவித்தார்.

வளைகுடாப் பகுதியில் இடம்பெற்று வரும் பிரிட்டிஷ் இராணுவத்தின் ஒத்திகைகளைப் பார்வையிடுவதற்காக அங்கு சென்ற ஹோன் செய்தியாளர்களிடம் பேசினார்.

ஆப்கான் மீதான தாக்குதல் நடவடிக்கைகளை வரையறுப்பது சாத்தியமற்றது எனத் தான் கருதுவதாக தெரிவித்த அவர், தாக்குதல்கள் அடுத்த வருடமும் தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் கூறினார்.

இதேவேளை -

ஓமானுடன் இணைந்து வளைகுடாப் பகுதியில் பிரிட்டன் நடத்தி வந்த இராணுவ ஒத்திகைகள் முடிவடைந்துள்ளன. எனினும் தனது துருப்புக்கள் சிலவற்றை பிரிட்டன் தொடர்ந்து ஓமானில் நிறுத்தி வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-6)

## ஜேர்மன் பிரதமர் இந்தியா விஜயம்

ஜேர்மன் பிரதமர் ஜெரோட் ஸ்குரூடர் நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் இந்தியத் தலைவர் புதுடில்லிக்கு வந்து சேர்ந்தார்.

அமெரிக்கா மீதான பயங்கரவாதத் தாக்குதல்கள், ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் மற்றும் ஜேர்மன் - இந்தியா இடையேயான இரு தரப்பு உறவுகள் என்பன குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் தமது பேச்சுக்களின்போது ஆராய்வர் என்று தெரிவிக்கப்பட்டது.(ம)

# முக்கிய இரு நகரங்களிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வாபஸ்

ஜெருசலேம்,ஒக்.30

பலஸ்தீனக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தான் ஆக்கிரமித்திருந்த இரு முக்கிய நகரங்களில் இருந்து இஸ்ரேலியப் படையினர் முழுமையாக வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.



ஞாயிறன்று இடம்பெற்ற சம்பவத்தில் கொல்லப்பட்ட பெண் ஒருவரின் சடலம் வீதியருகே காணப்படுகிறது.

ஞாயிறன்று இடம்பெற்ற இருவேறு வன்முறைச் சம்பவங்களில் 4 பெண்கள் உட்பட ஐந்து பலஸ்தீனர்கள் இஸ்ரேலியப் படையினரால் கொல்லப்பட்டபின்னர் இஸ்ரேலியப் படை வாபஸ் ஆரம்பமானது.

பெத்தலகேம் மற்றும் பிற்ஜாலா ஆகிய இரு நகரங்களிலிருந்தும் இஸ்ரேலியப் படையினர் முற்றாக வெளியேறியுள்ளனர்.

இஸ்ரேலிய சுற்றுலாத்துறை அமைச்சர் ரெஹவம் ஸிவி, பலஸ்தீனத் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இஸ்ரேலியப் படைகள் பலஸ்தீனப் பகுதிகளை ஆக்கிரமிக்கத் தொடங்கின.

பலஸ்தீன அதிகாரசபையின் கட்டுப்பாட்டில் இருந்த பெத்தலஹேம், பிற்ஜாலா, ஜினி, குவாலியா, ரமழா மற்றும் துள்கரம் ஆகிய நகரங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்திருந்தது.

இஸ்ரேலின் இந்த ஆக்கிரமிப்பை ஐ.நாவும் வேறுபல நாடுகளும் கடுமையாகக் கண்டித்திருந்தன. இதனால் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் இஸ்ரேலுக்கு ஏற்பட்டது. இதனை அடுத்து கடந்த வெள்ளியன்று இருதரப்பு அதிகாரிகளும் சந்தித்துப் படை வாபஸ் குறித்துப் பேசினர்.

படிப்படியாக ஆக்கிரமித்திருந்த பகுதிகளிலிருந்து படைகளை வெளியேற்ற அப்போது இணக்கம் காணப்பட்டது.



இதற்கிடையில், ஞாயிறன்று வடக்கு டெல் அவிவில் உள்ள ஹட்ரா என்ற இடத்தில் இஸ்ரேலியத் துருப்புக்கள் சுட்டதில் நான்கு பெண்கள் உயிரிழந்தனர்.

மற்றொரு தாக்குதலில் 'பாத்தா' அமைப்பு உறுப்பினர் ஒருவரும் இஸ்ரேலியர்களால் கொல்லப்பட்டார்.(ம)

# பயங்கரவாதம் தொடர்பான அமெரிக்க நிலைப்பாடு தளர்வு?

வாஷிங்ரன், ஒக். 30

ஒருவருக்குப் பயங்கரவாதிகளாகத் தென்படும் அமைப்பினர் மற்றொருவருக்கு விடுதலைப் போராளிகளாகத் தோன்றலாம்.

—இவ்வாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரக் குழு முன்னிலையில் உரையாற்றிய போது ஒப்புதல் தொனியில் தெரிவித்தார்.

பயங்கரவாதம் குறித்த அமெரிக்காவின் வரைவிலக்கணத்தில் தளர்வான மாற்றம் ஏற்பட்டு வருவதைக் கொலின் பவலின் கருத்து கோடி காட்டுவதாகக் கூறப்படுகிறது.

பயங்கரவாதம் தொடர்பாக அதிபர் புஷ்ஷின் அரசு இதுவரை பிரயோகித்த கடுமையான சொற்களில் இருந்து மிக அதிகமான அளவில் வித்தியாசப்படும் வகையில் பவலின்வார்த்தைப் பிரயோகங்கள் அமைந்திருந்தன.

பவல் தனது உரையில்

## பவலின் உரை கோடிகாட்டுகிறதாம்

மேலும் கூறியதாவது:–

பயங்கரவாத அமைப்புக்கள் என்று சில சமயங்களில் வர்ணிக்கப்படுகின்ற குழுக்கள் உரிமைகளைப் பெறுவதற்கு அல்லது அடக்குமுறையாளர்களிடமிருந்து விடுதலை பெறுவதற்கு போராடுபவையாக இருக்கலாம்.

'இதுதான் பயங்கரவாதம் – அது பயங்கரவாதமில்லை' என்று துல்லியமாக சகல அமைப்புகளையும் வகை பிரிக்க முடியாது. அரசியல் ரீதியாக அணுகப்பட வேண்டிய தேவை உள்ள—கலங்கலான பிரச்சினைகளும் இருக்கின்றன,

ஒஸாமா பின்லேடனின் அல்-கெய்தா, கொலம்பியாவின் இடதுசாரி புரட்சிகர ஆயுதப்படைகள், வட அயர்லாந்தின் ஐ.ஆர்.ஏயிலிருந்து பிரிந்து இயங்கும் 'றியல்' ஐரிஷ் விடுதலை இராணுவம் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் அவற்றை முற்றிலுமான பயங்கரவாத இயக்கங்களாக வரையறுத்துக் கொள்ளலாம்.

ஆனால், ஒருவருக்குப் பயங்கரவாதமாகவும், மற்றொருவருக்கு விடுதலைப் போராட்டமாகவும் தென்படுகின்ற நிலைமைகளை நோக்கும் போது, அதற்கான சரியான கணிப்பீடு ஒன்றைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது.

ஓர் அமைப்புக்கு எதிராகச் சர்வதேசக் கூட்டணியொன்றை அமெரிக்கா வழி நடத்தும்போது, அந்த அமைப்பு, அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் போராடுகிறதா?, உரிமைகளைப் பெறுவதற்காகக் குரல் கொடுக்கிறதா? என்பவற்றைப் பற்றி ஆராய வேண்டியுள்ளது.

இந்த விடயங்கள் சற்றுச் சிக்கலானவை. குறிப்பாக மேற்காசியப் பிரச்சினையைப் பொறுத்த வரை இந்த வேறுபாடுகளை விளக்குவதென்பது பெரும் சவாலாக இருக்கும்.

–இவ்வாறு கொலின் பவல் தெரிவித்தார்.

கொலின் பவலின் கருத்துக்களை அமெரிக்க அரசு கவனத்தில் தொடர்ந்து எடுக்குமேயானால் அமெரிக்காவில் விடுதலைப்புலிகள் மீது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள தடை விலக்கிக் கொள்ளப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர். (ஒ)

## தென்மராட்சியில் ஒரு போத்தல் பால் பத்து ரூபா!

தென்மராட்சி, ஒக். 30

தென்மராட்சி பிரதேசத்தில் — சில இடங்களில் ஒரு போத்தல் பாலின் விலை பத்து ரூபாவாக விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதி மக்களால் கைவிட்டு வந்த பசுமாடுகளை அங்குள்ளவர்கள் தற்போது பராமரித்து பால் எடுத்து அப்பகுதியில் தங்கியுள்ளவர்களுக்கு போத்தல் 10 ரூபாவாக விற்பனை செய்கின்றனராம். (க–117)


## சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு கீழ்வரும் பொருள்கள் உடன் தேவை

கூறுவிலைகளை 02-11-2001 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக நேரில் அல்லது தபாலில் அனுப்பிவைக்கவும்.

1) 100 (ஒரு நூறு) மலசலகூட பேசின்கள் நடுத்தரம் (உற்பத்தி செய்த நாடு குறிப்பிடுக)
2) 400 கம்பி 3 நூல் (இறக்குமதி அல்லது உள்ளூர் குறிப்பிடுக)
   400 கம்பி 2 நூல்
3) 800 பைக்கற் சீமெந்து உற்பத்தி (இனம், நாடு குறிப்பிடுக)
4) 100 கதவுகள் மாம்பலகையினால் செய்யப்பட்டது Z மொடல் 7 நூல் கனம் கொண்டது.
5) 30,000 அரி கற்கள் (கலவை விவரம் குறிப்பிடுக)

மேற்படி பொருள்கள் தனித்தனியாகவும் தரலாம். பொருள்கள் சங்கத்தில் கொண்டு வந்து சமர்ப்பிப்பது உட்பட கூறுவிலை கோரவும். பணம் உடன் வழங்கப்படும்.

நா. பொன்னம்பலம்
தலைவர்,

சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,
ஆனைக்கோட்டை.
30-10-2001 (சி/18896)


## செஞ்சிலுவைக் குழு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு, கீழேஉள்ள பெயர்களைக் கொண்டவர்களை உடன் தமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித்திருக்கிறது.

செல்லத்துரை ராஜா கந்தசாமி மனோராணி (42 வயது), ராஜா புஸ்பராணி (21 வயது), ராஜா நந்தினி (18 வயது), ராஜா பிரபாகரன் (15 வயது), ராஜா கபீசன் (13 வயது), ராஜா உமாராணி (10 வயது).

இவர்கள் அளவெட்டி வடக்கு அல்லது பளை, முகமாலையைச் சேர்ந்தவர்கள் ஆவர். (க)

## இளவாலையில் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

வலி. வடக்கு, ஒக். 30

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கோட்டங்களில் இருந்து தெரிவான பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமைபிற்பகல் 2 மணிக்கு இளவாலை புனித் ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

வலிகாமம் கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி, நிர்வாகம்) திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் இந்தப் போட்டி இடம்பெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா கலந்துகொள்வார்.

இன்றைய ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:

### 16 வயதுப் பிரிவு

கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரி எதிர் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக்கல்லூரி. (க–86)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் யோகநாதன் (அருமை)

தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் யோகநாதன் (அருமை) நேற்று (29 – 10 - 2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் சிவகங்கை தம்பதியினரின் அன்பு மகனும், கமலேஸ்வரியின் (கொழும்பு) அன்புக் கணவரும், அருட்குமரனின் (லண்டன்) அன்புத் தந்தையும், ந. பரமேஸ்வரி (புதுக்குடியிருப்பு), கு. தங்கரத்தினம் (வவுனியா), இ. சுந்தாலிங்கம் (கனடா), க. விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவரத்தினம் (புதுக்குடியிருப்பு), குமரேசு, கனகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சின்னத்தங்கத்தின் (கனடா) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30 – 10 - 2001) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. விஜயலட்சுமி
(சகோதரி)

பத்தானை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில். (94051)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் செட்டியார் உத்தரகோசமங்கை

16, கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகலிங்கம் செட்டியார் உத்தரகோசமங்கை நேற்று (29 - 10 – 2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் செட்டியாரின் அன்பு மனைவியும், கனகசபை, சோதி, கனகம்மா, கமலம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் மார்க்கண்டு, பூரணசற்குணலிங்கம், சந்திரசேகர் ஆகியோரின் மைத்துனியும், முத்துவேலு செட்டியார், சுசிலாதேவி, ரவீந்திரகுமார், இந்திரகுமார் ஆகியோரின் தாயாரும், விமலாதேவி, குமாரசுந்தரம், றூபி, சகுந்தலாதேவி ஆகியோரின் மாமியாரும், பிரசாந்தன், கஸ்தூரி, கஜரூபன், டிலக்ஸி, ராகுலன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30 - 10 - 2001) செவ்வாய்க்கிழமை 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. இந்திரகுமார்
(மகன்)

16, கஸ்தூரியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (94054)

### செல்லத்துரை செல்வராணி

ஈவினையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வராணி நேற்று (29-10 2001) திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை — இரத்தினம்மா தம்பதியினரின் மகளும் அருட்செல்வம், செல்வதேவி ஆகியோரின் சகோதரியும் நகுலேஸ்வரன், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் பமிலாவின் (உடுவில் மகளிர் கல்லூரி) பெரியதாயும், றமேஸ், பிருந்தா, தினேஸ், றம்மியா, பவித்திரா, பாலகுமார், சுஜமுகன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30 – 10 – 2001) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈவினை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. நகுலேஸ்வரன்
(மைத்துனர்)

புத்தூர் வீதி,
ஈவினை-புன்னாலைக்கட்டுவன். (94053)

### பொன்னையா தட்சணாமூர்த்தி

(நாவற்குழி)

நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் கேணியடி, கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா தட்சணாமூர்த்தி நேற்று (29-10-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கணேஸ்வரியின் அன்புக் கணவரும், மாணிக்கம், இராசம்மா, காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கந்தையா ஆகியோரின் சகோதரரும், சுதர்சினி (கனடா), தர்சினி, சுவேந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதராசா, ஆனந்தராசா, புஸ்பராணி (டென்மார்க்) ஆகியோரின் சிறியதந்தையும், மகேந்திரன் (கனடா), யோகேஸ்வரன் (யா. ப.நோ.கூ.ச.), சசிகலா, விஜயலட்சுமி, மனோகரன் (டென்மார்க்) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30-10-2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் கொக்குவில் மேற்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி யோகேஸ்வரன் தர்சினி (மகள்)
க. வரதராசா (பெறாமகன்)

கேணியடி,
கொக்குவில் மேற்கு. (94055)

உதயன்

## மூதூரில் தேர்தல் காலக் கலவரம்

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்ப் பகுதியில் வசிக்கும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு இடையே இனக்கலவரம் வெடிக்கக்கூடிய பதற்ற சூழ்நிலை உருவாகியிருப்பதை அடுத்து அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து, மேலதிக பொலீஸ் அணிகளைக் குவிக்கும் அளவுக்கு நிலைமை போயிருக்கின்றது.

தமிழ்மொழி பேசுகின்ற இனத்துவத்தால் முஸ்லிம்களும் தமிழர்களே. எனினும் தமிழ் மக்களுக்குள் மதத்தாலும் கலாசாரத்தாலும் தனி அடையாளம் உள்ள ஒரு பிரிவினர் அவர்கள். ஆனாலும் பேச்சுவழக்கிலும் எமது அரசியல் வாதிகளின் நடவடிக்கைகளினாலும் தமிழ் பேசுகின்ற முஸ்லிம்கள் 'தமிழர்' என்ற அடையாளக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு 'முஸ்லிம்கள்' என்ற தனி இனத்துவப் பிரிவாகக் கணிக்கப்படும் சூழ்நிலை உருவாகிவிட்டது. அதுமாத்திரமல்லாமல் அரசியல், நடைமுறைப் போக்குகள் தமிழர்கள் - முஸ்லிம்கள் என இனத்துவ முரண்பாடுகளையும் உருவாக்கிவிட்டன.

வருடம் தோறும் உரிய பருவகாலம் வரும்போது அதுவரை வெயில் எறித்த பிரதேசத்தில் மழைகொட்டுவது போல -

கிழக்கிலும் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் தமிழர் - முஸ்லிம்கள் இடையே நிலவும் இனசௌஜன்யம் - பரஸ்பர நல்லுணர்வு - குழம்பி, கலவரங்கள் வெடிப்பதும், இரு தரப்பினர் இடையே முறுகல்நிலை முற்றி ஒருவருடன் ஒருவர் மோதிக்கொள்வதும் வழமையாகிவிட்டது.

இனப்பிரச்சினையால் எழுந்த யுத்த நிலைமை, அதனால் ஏற்பட்ட பாதிப்புகள், அனுபவங்கள் காரணமாக நாடாளுமன்ற அரசியலில் கிழக்குத் தமிழர்கள் ஈடுபாடு காட்டாமல் ஒதுங்க -

அந்த வெற்றிடத்தைப் பயன்படுத்தித் தாங்கள் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் நோக்குடன், சில முஸ்லிம் தலைவர்களும், சக்திகளும் தமிழர் - முஸ்லிம்கள் கலவரங்களைத் தூண்டிவருவது மறைவில் நடக்கும் யதார்த்தமாகும்.

இத்தகைய கலவரங்கள் மூலம் முஸ்லிம்களிடையே உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, அவர்களின் ஒட்டுமொத்த வாக்கைத் தங்களுக்குத் திரட்டிக்கொள்ளலாம் என்ற நோக்கில் இத்தகைய சதித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

தமிழ்மக்களின் உரிமைக்கான - சுய இருப்புக்கான - சுய நிர்ணய உரிமைக்கான - போராட்டம் ஒன்று நடந்து கொண்டிருப்பதையும் -

தாம் பேசும் மொழியால் முஸ்லிம்களும் தமிழர்களே என்பதையும் -

முஸ்லிம் தலைவர்களும் இத்தகைய சக்திகளும் மறந்துவிடக்கூடாது.

"தமிழ்மக்களின் சுயாதிபத்தியத்தை வென்றெடுக்க தமிழர் பிரதிநிதிகளுடன் முஸ்லிம் காங்கிரஸ் பேச்சு நடத்தி, எத்தகைய ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக உள்ளது." - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ்.மாவட்ட வேட்பாளர் எம்.ஏ.சி.இக்பால் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் கவிழும் அரசுகளுக்கு முண்டுகொடுப்பது குறித்தும், அல்லது ஆதரவை விலக்கி அரசுகளைக் கவிழ்ப்பது குறித்தும் நடத்தும் அரசியல் பேரப் பேச்சுக்கள் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுக்கு - வழமையானவை; நன்கு பரிச்சயமானவை.

ஆனால் தமிழ் மக்களின் சுயாதிபத்தியத்தை வென்றெடுக்கும் போராட்ட சக்திகளுடன் பேச முயல்வது அத்தகைய அரசியல் பேரப் பேச்சு அல்ல என்பதையும் -

அது வெறும் அரசியல் நாடகம் போல நடத்தப்படக்கூடியதல்ல என்பதையும் -

சம்பந்தப்பட்ட தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

"வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் தமிழ் மக்களுடன் மிகவும் நெருக்கமாக வாழ்ந்து வந்துள்ளார்கள். இனிமேலும் அவர்கள் அப்படியே வாழ வேண்டும்" - என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் கூறுவதும் உண்மையானது; யதார்த்தமானது.

அதை நடைமுறையில் செயற்படுத்துவதை மூதூரில் இடம்பெறுவது போன்ற கலவரங்கள், பதற்றங்கள் குழப்பிவிடும். இதனை அந்தப் பிரதேச தமிழ் - முஸ்லிம் மக்களும் பிரமுகர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இருதரப்பும் தங்களுக்கிடையில் காலம்காலமாக நிலவிவரும் நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதே இரு சாராருக்கும் நல்லது என்பதையும் -

இத்தகைய கலவரங்கள், பதற்றங்கள், அரசியலில் - தேர்தலில் - குறுக்கு வழியில் இலாபம் தேட முயலும் அரசியல் வாதிகளுக்கு மட்டுமே நன்மை பயக்கும்; மக்களுக்கு அல்ல என்பதையும் -

அனைவரும் புரிந்துகொள்வது நல்லது.

வடக்கு - கிழக்கு புனரமைப்புப் பணிகள்:

# போர் முடிவுக்கு வந்தால்தான் ஜப்பான் உதவிகளை வழங்கும்

## அந்நாட்டுத் தூதர் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.30

யுத்தம் நிறுத்தப்பட்டு இனப்போர் முடிவுக்கு வருமானால் வடக்கு - கிழக்குப் பகுதிகளைப் புனரமைக்க ஜப்பான் நிதியுதவிகளை வழங்கும்.

ஜப்பானியத் தூதர் சிப்சீரோ ஒட்சூக்கா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுகக்கும் இடையே சமாதான முயற்சிகளுக்கு ஜப்பான் ஒரு பிரதான ஆதரவாளராக இருந்து பங்காற்றும் என்றும் -

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும முயற்சிகளில் கடந்தகாலங்களைப் போன்று திரைமறைவிலிருந்து ஜப்பான் செயற்படும் என்றும் -

ஜப்பானியத் தூதர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக்கு மிகக் கூடுதலான உதவிகளைச் செய்யும் ஒரே நாடான ஜப்பான், சமாதானம் ஏற்படும் பட்சத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டையும், ஏனைய பாதிக்கப்பட்ட பகுதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கான ஒத்துழைப்பை வழங்கும். சர்வதேசப் பிரச்சினைகளுக்கு வன்முறை பாவிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளாத அடிப்படையில் இலங்கையின் பிரச்சினைகளைச் சமாதான முறைகளில் தீர்த்துவைக்கும்படி அரசாங்கத்தை ஜப் பான் தூண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## நாட்டு நடப்பு

அன்றுதொட்டு இன்றுவரை
அவனியில் அமாவாசை மாதமோர்நாள்
ஒன்றைவிட்டோர் நாளிங்கு
ஓயாத அமாவாசை ஆச்சு
கையினில் காசும் இன்றி
கியூவில் நின்றெண்ணை வாங்கி
தையலார் படும்பாட்டை சாற்ற
தரணியில் வார்த்தை ஏது?
'ஐய்யா! லைற் பில் கட்டு' என்று
அதட்டினார் மின்சபையார் தாமே!

- விகடகவி.

# மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுகின்றனர் சித்தார்த்தனும் வரதரும்

## இப்படிக் கூறுகிறார் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம்,ஒக்.30

தமிழ் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நான்கு கட்சிகள் ஒன்றிணைந்து புதிய கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனைச் சகிக்கமுடியாத சித்தார்த்தனும் வரதராஜப்பெருமாளும் எமது கட்சி மீது தவறான கருத்துக்களைக் கூறி வருகின்றனர். அதாவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகின்றனர்.

- இவ்வாறு கூறியுள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி)யின் பொதுச் செயலாளரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஒரு சில தினங்களாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் சித்தார்த்தனும், முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாளும் என மீதும், எமது கட்சி மீதும் தவறான சில கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இதற்கு விளக்கமளிக்க வேண்டியது எனது கடமையாகும்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் வன்னியிலும், மட்டக்களப்பிலும் இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றார்கள். அதனை நிறுத்தினால் அவர்களைக் கூட்டமைப்பில் இணைப்பது தொடர்பாக ஆலோசிக்கலாம் என்பதே தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் நிலைப்பாடாக இருந்தது. அது தொடர்பாக எந்த முடிவையும் எடுக்கமுடியாத சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி)விடம் ஆயுதங்கள் இருக்கின்றதெனக் கூறுவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாகும்.

1990ஆம் ஆண்டில் இருந்து எனது தலைமையில் இயங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ். இன்றுவரை இராணுவத்துடன் இணைந்து செயற்படவுமில்லை; அரசின் அடக்குமுறைச் சட்டங்களுக்கு ஆதரவளித்ததுமில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

வரதராஜப்பெருமாள் இலங்கை திரும்பிய பின் அரசுக்கு ஆதரவாகவும் இராணுவத்துடன் இணைந்து செயற்படவும் முனைந்தபொழுது அப்படியானவர்கள் எல்லோருமே கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்கள். அதனை எதிர்த்துத்தான் பெருமாள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார். அதேசமயம் முன்னர் இளைஞர்களைத் துரத்திப் பிடித்தவர்களும் நான்கு கட்சிக் கூட்டமைப்பில் உள்ளதாகவும் பெருமாள் குறிப்பிட்டுள்ளார்.

### அபாண்டமான பழி

பெருமாள் முதல்வராக இருந்த பொழுது முதலமைச்சரின் பரிந்துரையின் பிரகாரமே, இளைஞர்கள் பலாத்காரமாக இணைக்கப்பட்டனர். அது கட்சியின் முடிவல்ல. ஆனாலும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் முக்கியஸ்தன் என்ற வகையில் பெருமாள் விட்ட அந்தத் தவறுக்கு நான் பல தடவை மக்கள் மத்தியில் மன்னிப்புக் கேட்டுள்ளேன். 1990க்குப் பின்னர் எனது பத்து வருட அரசியலில் பிழைபிடிக்க முடியாதவர்கள், தமது தவறுகளை என்மீது சுமத்த விளைவது கடைத்தெடுத்த அயோக்கியத்தனமும், தேர்தல் சமயத்தில் என்மீது அபாண்டமான பழி சுமத்தும் முயற்சியுமாகும்.

எனவே, சித்தார்த்தன், பெருமாளின் கருத்துக்கள் பொய்யானவை, போலியானவை என்பதுடன் கூட்டமைப்பின மீது சேறடிக்கும் நோக்கம் கொண்டதுமாகும்.

### விஷமப் பிரசாரம்

மிக நீண்டகாலத்தின் பின்னர் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்படுவதை ஜீரணிக்க முடியாதவர்களின் விஷமத்தனமான பிரசாரமே இதுவாகும். தமது சுயநலன்களைப் பாதுகாத்துக் கொள்ள அரசுடன் ஒட்டியிருக்க வேண்டும் அதற்காகத் தமிழ் மக்களை எந்த விலைக்கும் விற்கலாம் என்று கருதுபவர்கள், தேர்தல் வந்தவுடன் தாம் ஒரு கட்சிக்கும் ஆதரவல்ல என்று குத்துக்கரணமடிப்பதும், தமிழ் மக்களின் உரிமைக்காக இணைந்து செயற்பட முயற்சிப்பவர்களைக் கொச்சைப படுத்துவதும் சுத்த சுயநல அரசியலேதவிர வேறல்ல.

இவர்களை இனங்காண வேண்டியதும், எதிர்வரும் தேர்தலில் இவர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டியதும் தமிழ் மக்களின் கடமையாகும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.(க)

## ஒரு மாதத்திற்குமுன் விசர்நாய் கடித்த சிறுமி மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

ஒரு மாதத்திற்குமுன் விசர்நாயினால் கடியுண்டு அதற்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்தைப் போடத் தவறிய சிறுமி, விசர்நாய்க் கடியினால் ஏற்படும் நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், கொட்டடியைச் சேர்ந்த இந்திரகுமார் பிரியா (வயது 6) என்ற சிறுமியே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்த இச்சிறுமி, யாழ்ப்பாணத்தில் உள்ள அநாதைச் சிறுவர்கள் பராமரிப்பு நிலையமொன்றில் அண்மையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்றும் -

அங்கிருக்கும் பொழுதே கடந்த 26ஆம் திகதி இவருக்கு திடீரென ஏற்பட்ட மூச்சுத்திணறல், உடற்சோர்வு, காய்ச்சல் காரணமாக யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் (நேற்றுமுன்தினம்) அங்கு மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-15)

## வாழைச் செய்கையில் பாதிக்கப்பட்டோருக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.மாவட்டத்தில் வாழைச் செய்கையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்க வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு விவசாய சம்மேளனங்கள் ஊடாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வாழைச் செய்கையினால் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள், விவசாய சம்மேளனங்கள் மூலமாக பாதிக்கப்பட்ட தன்மைக்கேற்ற அடிப்படையில் நிதியைப் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் -

நிதிக் கொடுப்பனவுகள் ஒரு வாரத்தினுள் வழங்கப்படும் எனவும் - யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் தெரிவித்தார். (க-180)

# அச்சுவேலி, ஆவரங்கால் பகுதி வர்த்தகர்களுக்கு நிவாரண உதவி

அச்சுவேலி,ஒக்.30

அச்சுவேலி வர்த்தகர் சங்கம் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு நிவாரண உதவி பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

முதற்கட்டமாக குறைந்த முதலீட்டில் வர்த்தக முயற்சியில் ஈடுபட்டுப் பாதிப்புக்கு உள்ளான 25 வர்த்தகர்களுக்கு நிவாரண உதவி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அச்சுவேலி வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ்.தங்கராசா அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பாதிப்புக்கு உள்ளாகிய அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் வர்த்தகர்கள் சங்கத்துடன் தொடர்புகொண்டு அதற்கான படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (க-11)

## நல்லின உப உணவுப் பயிர் விதைகள்

யாழ்ப்பாணம், ஒக்.30

நல்லின உப உணவுப் பயிர் விதைகள் புத்தூர் கமநல சேவை நிலையத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

யாழ்.குடாநாட்டில் நல்ல விளைச்சலைக் கொடுக்கக் கூடிய பயிற்றை, கத்தரி, வெண்டி, தக்காளி, புடோல், பாவல், மிளகாய் போன்ற பயிர் வகைகளின் விதைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

மானிய விலையில் விற்பனை செய்யப்படும் விதைகளை மாரி மழை காலத்தில் பயிரிட்டு பயன் பெறுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-11)

கொடிகாமம் தெ.ப.அ.கூ. சங்கத்தின்

# கிளைக் குழு உறுப்பினர் தெரிவு நவம்பர் 3இல்

கொடிகாமம் பனை, தென்னை என அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 11 கிளைகளுக்குமான கிளைக் குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலை எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனை, தென்னை வளம்) சு.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வசித்து வருவதால் அவர்களுக்கு வசதியான இடங்களில் தேர்தல்களை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை -

மேற்படி சங்கத்தின் கிளைக் குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் கடந்த ஜூன் மாதம் 9ஆம் திகதி நடத்தப்பட்ட சமயம் போதிய உறுப்பினர்கள் சமுகமளிக்காததால் தெரிவுகள் இடம்பெறவில்லை. (ஐ-17)

### நாளை

ஐப்பசி 14
புதன்கிழமை
திதி : சதுர்த்தசி
முற்பகல் 11.01 வரை
நட்சத்திரம் : ரேவதி
காலை 7.44 வரை
பூரணை விரதநாள்
மரணயோகம்
சுபநேரம் : 4.03 - 6.33
ராகுகாலம் : 12.03 - 1.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எவ்வுயிரையும் தன்னுயிராய்ப் பார்க்கும்படி செய்வது சேவை.



# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஜோதிடம்

கம்பியூட்டர் மூலம் ஜாதகங்கள் கணித்து எழுதிக் கொடுக்கப்படும். எண், கிரக பலன்களும், திருமணப் பொருத்தம் என்பன பார்க்கப்படும். தொடர்புகளுக்கு: நாகந்தையா, மூத்த விநாயகர் கோயில் தெற்கு, ஆனைக் கோட்டை. (94038)

## ஒரு காதலின் கதை

இலங்கை இனப் பிரச்சினையின் ஆரம்ப காலகட்டத்தைச் சித்திரிக்கும் நாவல். 310 வானொலி நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இரண்டாவது நாவல். 182 பக்கங்கள் ரூபா 150/=. (94006)

## இறைச்சிக் கோழிகள் தேவை

புறொயிலர் மற்றும் இறைச்சிக் கோழிகள் தேவை. (நல்ல விலை தரப்படும்) தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (94025)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. நியாயமான விலை கொடுக்கப்படும். காலை 6 - 12 மணிவரை. தொடர்புகொள்ளவும்: P.அமலன், இல. 227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (கலட்டிச் சந்திக்கு அருகில்). (94034)

## தவறிவிட்டது

நேசதுரை செல்வேந்திரன் என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 0903037920) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நாகம்மாள் வீதி, உடுவில், சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (94021)

மு.இளையாங்கனி என்பவருடைய மூக்குக் கண்ணாடி ஒன்று சித்தன் கேணியிலிருந்து யாழ் நகருக்கு பஸ் ஸில் பயணம் செய்தபோது தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈச்ச மோட்டை வீதி, தவம் கடையில் தயவு செய்து ஒப்படைக்கவும். (94041)

புத்தூர் மேற்கு, நவக்கிரியைச் சேர்ந்த வசந்தராசா சற்குணராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.801094120V), விசேட அடையாள அட்டை (இல.0903033158 ஆகியன கடந்த 24ஆம் திகதி பருத்தித்துறைக்கும் மாலு சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். மு.சுப்பிரமணியம், 2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. சன்மானம் வழங்கப்படும். (94043)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள HONDA - C50 (LANCER) மொடல் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.சிற்றம்பலம் (சேவையர்), 'சாந்தபுரி' மயிலணி, சுன்னாகம். (93999)

கலர் மீன்கள், மீன் தொட்டிக்குரிய மோட்டர்கள், அழகுப் பொருள்கள், மீன் தொட்டிக்கு அடியில் போடும் வெள்ளைக் கற்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (நண்பகல் 12 மணிக்குப் பின் பார்வையிடலாம்) (94030)

குளிர்சாதனப் பெட்டி (இரட்டைக் கதவு - நஷனல்), காஸ்குக்கர் (4 அடுப்புக்களும் அவனும் சேர்ந்தது), இரண்டு மின்மோட்டார்கள் (Three Phase 7 1/2 H.P), இரண்டு ஸ்ராட்டர் சுவிட்ச், 100Amp ஒன்று, இரண்டு 50Amp சுவிட்ச் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செ.தேவநாதன், (தபாற்கந்தோர் அருகில்), நாவலடி, கோப்பாய் மத்தி. (94029)

வீடியோ ரைற்றில், வீடியோ எடிற றிங், ஓடியோ மிக்சர், கனொன் மவ்டியில் புறொக்கிறாம் கமரா (T - 70), பிளாஸ் 277 T, சாம்சன் வீடியோ கமரா ஸ்ராண்ட், ரெலிஜெஸ் ரெலி போன் FP-1000 (ஜப்பான்) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- S.வசந்தன், ஸ்ரேசனடி, கடவைப்புலம், சுன்னாகம். (94026)

## விற்பனையாகின்றன

பொதுஅறிவு, ஆங்கிலத்தில் கட்டுரைகள், கந்தசஷ்டி கவசங்கள், அழகியல் (தரம் 1-5), 2002இல் மண்ணில் உங்கள் யோக பலாபலன்கள். ஆசிரியர் V.A.சிவராசா, 152B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (93986)

## கணக்கீடு

உயர்தரப் பிரிவுகளுக்கான வகுப்புகள் குழுவாகவும், தனித்தும் பிரபல ஆசிரியரால் கற்பிக்கப்படும். தொடர்பு: 46, Temple Road (IBSஇற்கு அருகில்), யாழ்ப்பாணம். பி.ப.3.00 மணிகுப் பின். (93971)

## SPOKEN ENGLISH

ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, இலக்கணம், கதைக்கப் பயில அடிப படையில் இருந்து, வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும். வார இறுதி, மாலை வகுப்புகள். ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி. 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (93993)

## பரீட்சையில் விதிவிலக்கு

1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் 1999 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில 45 வயதினையடைந்த மருந்துக் கலவையாளர்களுக்கு வினைத்திறமை காண் தடைப் பரீட்சையிலிருந்து விதி விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 1999 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் தமது 45 வயதை அடையும் மருந்துக் கலவையாளர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

கொழும்பிலுள்ள பொதுநிர்வாக அமைச்சு அண்மையில் வெளியிட்டுள்ள 09-2001 இலக்க சுற்றறிக்கையில் இந்த விவரங்கள் வெளியாகி இருப்பதாக அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்க யாழ்கிளையின் செயலாளர் இ.தவராசலிங்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள தலைமைச் சங்கமும் இது தொடர்பான விபரத்தை யாழ் கிளைக்கு அறிவித்துள்ளது.(ஐ-135)

## தேசிய சேமிப்பு வங்கி அறிவித்தல்

உலக சிக்கன தினத்தை முன்னிட்டு நாளை (31.10.2001) புதன்கிழமை பண வைப்புக்களை ஏற்கும் பொருட்டு தேசிய சேமிப்பு வங்கியின் சகல கிளைகளும் காலை 8.30 - 12.00 மணிவரை திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி,
யாழ்ப்பாணம்.

NSB
உங்கள் குடும்ப வங்கி (C/18892)

---

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின்
நிதி வளர்ச்சிக்காக
நடத்தப்படும்

யாழ்.முன்னணி இசைக் கலைஞர்கள்
இணைந்து வழங்கும்
'அருணாவின்'
இன்னிசைக் கானங்கள்.

இடம்: இளங்கலைஞர் மண்டபம்
(சட்டநாதர் வீதி, நல்லூர்.)
நாள்: நாளை (31-10-2001) புதன்கிழமை
நேரம்: பிற்பகல் 2.30 மணி
(புதிய நேரம்.)

"அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்."


நுழைவுக் கட்டணம்
ரூபா 50/= மட்டும்.

- நல்லூர்
றோட்டறக்ட் கழகம்.

(C/18891)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 16 • 02 • 1944
மறைவு 30 • 09 • 2001

### அமரர் சந்தனம் நாகமணி

(ஓய்வுபெற்ற உப அதிபர்)

**அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்த உங்களை எம்மால் மறக்க முடியுமா? ஆத்ம சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.**

எமது பாசத்துக்குரிய குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.10.2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறுகின்றது. அதைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் வந்து கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'தமிழகம்'*
*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

-மனைவி, பிள்ளைகள்.

(94036)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 30 • 09 • 1945
மறைவு 30 • 09 • 2001

### அமரர் தம்பித்துரை இலங்கைநாதன

(கனகலிங்கம்)

இவரின வீட்டுக்கிருத்தியம் இன்று (30.10.2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- தாய், மனைவி,
மக்கள், சகோதரர்கள்,
மருமக்கள்.

*ராமகிருஷ்ணா லேன்,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

(94031)

---

உ
ஓம் தத் சத் ஓம்



யோக சுவாமிகளின் ஆசிபெற்றவரும்
காந்திஜி - வினோபாஜி அடிகளின் அடியொற்றி
வாழ்ந்தவரும்
வடஇலங்கை சர்வோதய அறங்காவலருமாகிய
தொண்டர்

## கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின்

### நீர்க்கடன் - பிதிர்க்கடன் - ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

03.10.2001 புதன்கிழமை சிவபதமெய்திய

தொண்டர் **கந்தையா திருநாவுக்கரசு** அவர்களின்

**நீர்க்கடன்:** உயிர்கள் - பிதிர்கள் - தேவர்கள் - அறங்கள் போற்றும் குளம் கார்க்கும் பூத்த தருமம் கொண்டதும். அவர் தனது இறுதிக் காலத்தில் தூர்வாரும் பணியினை மேற்கொண்டு துப்புரவு செய்த புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள அடைகாத்த குளத்தில் நாளை (31.10.2001) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு நீர்க்கடன் கிரியைகள் நடைபெறும்.

**பிதிர்க்கடன்:** எதிர்வரும் (02.11.2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு புங்குடுதீவு சர்வோதய சேவை வளாகத்தில் பிதிர்க்கடன் கிரியைகள் நடைபெறும்.

நாளை (31.10.2001) புதன்கிழமை பௌர்ணமி தினத்தன்று அன்னாரின் அஸ்தியும், திருவுருவச் சிலையும் அலங்கரிக்கப்பட்ட கட்டுத்தேரில், அடைகாத்த குளத்திலிருந்து மகாத்மாகாந்தி வீதி வழியாக, இருப்பிட்டி பிரதான வீதிக்கு வந்து, அப்பிரதான வீதி வழியே கழுதைப்பிட்டி துறைமுகம் சென்றடையும். அங்கிருந்து நயினை அம்பாளின் அருட்பார்வை கொண்ட இந்து சமுத்திரத்தின் ஏழாறு சங்கமிக்கும் சங்கமத்தில் கலக்க கரையிறக்கப்படும்.

பேராற்றலும் பெருவாழ்வும் மக்களுக்காக பெருந்தொண்டும் ஆற்றியவரின் நீர்க்கடன் கிரியைகளிலும், தேர்ப்பவனியிலும், சமுத்திர பூசையிலும், பிதிர்க்கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவுரிமை, நட்புரிமை, அன்புரிமை கொண்டு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

★ **இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

அழைப்பவர்கள்:
தாயார் **க.பார்வதிப்பிள்ளை,** சகோதரர்கள் சார்பில்
**க.புஸ்பமணி, பொ.ஜமுனா தேவி.** (நிர்வாக இயக்குநர்)

*சர்வோதய சேவை வளாகம்,*
*புங்குடுதீவு.*

(94032)

# புலிகளை நாங்கள் காட்டிக் கொடுக்கவில்லை; போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவுமில்லை!

## யாழ்.பஸ் நிலையத் திறப்பு விழாவில் ஜெகன்

(அலுவலகச் செய்தியாளர்)

யாழ்ப்பாணம்,ஒக்.30

ஈ.பி.டி.பி. ஒரு போதுமே புலிகளின் போராட்டத்தைக் கொச்சைப்படுததியதில்லை; அவர்களைப் காட்டிக் கொடுத்ததும் இல்லை; புலிகளுக்கு எதிராக அரசுடன் இணைந்து செயற்பட்டதும் இல்லை. ஆனால் அவர்களின் செயற்பாடுகளை மட்டுமே விமர்சித்து வந்திருக்கிறது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் அக்கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளருமான கே.வி. குகேந்திரன் (ஜெகன்).

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் நிதியினால் புனரமைக்கப்பட்ட யாழ்நகர பஸ் நிலையத்தின் திறப்பு விழா நேற்று நண்பகல் மழைக்கு மத்தியில் - நடைபெற்றது. அந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் அமைச்சரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர் அங்கு வருகை தரவில்லை.

போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பொதுமுகாமையாளர் எஸ். மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த திறப்பு விழா வைபவத்தில் ஈ.பி.டி.பி. பிரமுகர் குகேந்திரன் மேலும் கூறியதாவது:-

1997ஆம் ஆண்டு முதல் எமது பணிகள் தீவுப் பகுதியிலிருந்து யாழ் நகருக்கு விரிவுபடுத்தப்பட்டன. அன்று முதல் நாம் அர்ப்பணிப்பு உணர்வுடனேயே சேவையாற்றி வருகின்றோம். தேர்தல்கள் வரலாம், போகலாம் நாங்கள் தேர்தலுக்காக வந்து வேடிக்கை காட்டும் கூட்டத்தினர் அல்லர். நாங்கள் வீரவசனம் பேசவில்லை.

எமது இளைஞர்களை ஆயுத மோகத்திற்குள் தள்ளியவர்கள் இன்று என்ன செய்கின்றார்கள்? தற்போது கூட்டுச் சேர்ந்துள்ளார்கள் . ஐக்கியம் தேவைதான். அதனை ஈ.பி.டி.பியும் வரவேற்கின்றது. ஆனால் இவர்களது ஐக்கியம் எப்படியானது? ஈ.பீ.டி.பியை ஓரங்கட்டுவதற்காக உருவானது. ஆறு மாதத்தில் தீர்வு காணாவிட்டால அஹிம்சைப் போர் என்கிறார்கள். புலிகளுககு யாரும் மணிகட்ட முடியாது. ஒருவேளை புலிகளுக்கு இக்கூட்டு தற்காலிக தேவையாக இருக்கலாம்.

இன்று வவுனியாவில் முட்டைக்கு, தேங்காய்க்கு என்று வரி விதிக்கின்றார்கள். கூட்டுச் சேர்ந்த பின்னரும் அவர்கள் இந்தச் செயற்பாட்டை இது வரை நிறுத்தவில்லை.

நாம் மக்களை வெட்டவில்லை, காட்டிக் கொடுக்கவில்லை, கப்பம் கேட்கவுமில்லை. ஒருவருட காலத்தினுள் நாம் பல கோடி ரூபாய்களை செலவு செய்து எத்தனையோ வேலைத் திட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளோம். இவையெல்லாம் தேர்தல் வரும் என்பதற்காகவா?

இன்று யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி இல்லையென்றால் மக்கள் எவரும் நகர்ந்திருக்கக்கூட முடியாது. அரச படைகளின் அதிக்கத்தினுள் மூழ்கியிருப்பார்கள். ஆனால் எங்கிருந்தோ இன்று வந்தவர்கள் புல்லுப் பிடுங்க 3ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகக் கிண்டலடிக்கின்றார்கள். அவர்கள் நிச்சயம் மக்களிடம் அடி வாங்கத் தான் போகிறார்கள்.

எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் அந்தக் கட்சியுடன் பேரம் பேசி - அதற்கு ஆதரவு வழங்கி மக்களுக்கான எமது பணியைத் தொடர்ந்து முன்னெடுப்போம். எந்தவொரு அரசும நிச்சயமாக ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் தான் ஆட்சியமைக்க முடியும் என்பதைத் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

அரசியலில் எமக்கு ஒரு தெளிவான பார்வை உண்டு. ஈ.பி.டி.பி. தமிழ் மக்களை அரசிடம் அடகுவைத்து விட்டதாகக் கூறுகின்றார்கள். நாம் யாரை அடகு வைத்தோம்?

எமது செயற்றிட்டங்கள் தேர்தலுக்காகத் தீட்டப்பட்டவை அல்ல. அரசு யுத்தத்திற்குச் செலவழிக்கும் பல கோடி ரூபா பணத்தை நாம் எமது மண்ணிற்கு உகந்த பணமாக மாற்றி இருக்கின்றோம். இல்லையேல் அவை குண்டுகளாகவே இங்கு வீழ்ந்திருக்கும்.

- இவ்வாறு குகேந்திரன் தெரிவித்தார்.



### நிஷாந்தன்

நல்லூர் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் பிரதி அமைப்பாளருமான க.மணிபல்லவராஜன் (நிசாந்தன்) உரையாற்றுகையில் -

பல தசாப்தங்களைக் கடந்த பின்னர் இன்று சிறந்த முறையில் யாழ்.மத்திய பஸ் நிலையம் புனரமைக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் மக்கள் தெரிவுசெய்த பிரதிநிதிகள் இந்த பஸ் நிலையத்தைத் திரும்பியும் பார்க்கவில்லை. தேர்தல் பிரசாரத்துக்கு மேடை போட்டுப் பேச மட்டுமே இங்கு வந்திருந்தனர்.

இந்த பஸ் நிலையத்திற்கு வருகை தருவோரில் அநேகமானோர் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களே. நோய்க்குச் சிகிச்சை பெற வந்தோர் மேலும் நோயைப் பெற்றுச் செல்லும் ஒரு நிலையே இதுவரை இங்கு காணப்பட்டது. இன்று அந்நிலை மாற்றப்பட்டுள்ளது.

மழை காலத்தில் மழையில் நனையாது மக்கள் பஸ்ஸில் ஏறிச் செல்ல வேண்டும். எமது மக்களும் குளிரூட்டப்பட்ட பஸ்களில் செல்ல வேண்டும். ரயில் மூலம் கொழும்பு செல்ல வேண்டும். மாட்டு வண்டிலில் செல்லும்நிலை இனியும் வேண்டாம். கடலில் சுரங்கம் அமைத்து ரயில் செல்லும் அளவிற்கு நவீன போக்குவரத்து வசதிகள் தற்போது உள்ளன.

ஈ.பி.டி.பி. கட்சிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை அக்கட்சி சரியாகப் பயன்படுத்தியுள்ளதா என்பதை எதிர்வரும் தேர்தலில் மக்கள் வெளிப்படுத்த வேண்டும்.

ஈ.பி.டி.பி. மண்ணையும் மக்களையும் விற்பதாகக் கூறுகின்றார்கள். அவ்வாறு கூறுபவர்களால் எமது மண எவ்வளவு தூரம் பாதுகாக்கப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை.

ஆடிக்கொருக்கால், அமாவாசைக கொருக்கால் வந்து நாமும் இருக்கின்றோம் எனக் காட்டிக் கொள்பவர்கள் இன்று வீடு வீடாகச் சென்று அபாண்டமான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்களால் எமது சேவை மேன் மேலும் வளர்ச்சியடைகின்றது.

கோயில் கட்டுவதை விமர்சிப்பவர்கள், வேட்பாளர் பட்டியலைத் தாக்கல் செய்ய முன்னர் கோயில் கோயிலாகச் செல்கின்றார்களே. இது அவர்களது ஆற்றாமையையே எடுத்துக் காட்டுகின்றது.

எமது செயற்பாடுகளுக்கு அஞ்சி கூட்டுச் சேர்ந்துள்ளவர்கள் பெரிதாக எதனையும் சாதிக்கப்போவதில்லை. வாக்குகளைச் சேர்தது ஆசனங்களைக கைப்பற்றுவதே இவர்களின் நோக்கம் - என்றார்.

யாழ்மாவட்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கமும் உரையாற்றினார்.

நேற்றைய வைபவத்தை ஒட்டி யாழ்பஸ்நிலையப் பகுதியில் நேற்றுக் காலை முதல் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

22 லட்சம் ரூபா செலவில் யாழ். பஸ் நிலையத்தின் தரைப் பகுதி தற்போது செப்பனிடப்பட்டுள்ளது. பயணிகளுக்கான நிழல் குடைகள் அமைக்கும் வேலைகள் இன்னும் பூர்த்தியடையவில்லை.

(ஐ-9)

---

## யாழ்.மாவட்டத்தில் இம்முறை
# 3,500 அரச ஊழியர்கள் தேர்தல் கடமை புரிவர்

யாழ்ப்பாணம்,ஒக்.30

எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் யாழ்.மாவட்டத்தில் இந்தமுறை 3,500 அரச ஊழியர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ளதாக யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராஜா தெரிவித்தார்.

இம்முறை யாழ் மாவட்டத்தில் 420 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறும். மொத்த 6 லட்சத்து 33 ஆயிரத்து 457 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

இம்முறை தேர்தல் கடமையில் ஈடுபடும் அரச ஊழியர்களுக்கு ஒதுக்கப்படும் வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பான பட்டியல் கொழும்பிலேயே தயாரிக்கப்பட்டு இங்கு அனுப்பிவைக்கப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

(ஐ-180-10)

### மொழிபெயர்ப்பாளர் பதவி விண்ணப்பம

யாழ்ப்பாணம்,ஒக்.30

மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு Iஇற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவரங்கள் 26ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன.

வர்த்தமானியின் பிரதியை யாழ். அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

(க-7)

### மட்டக்களப்பில் புலி உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா,ஒக்.30

மட்டக்களப்பில் கடந்த 23ஆம் திகதி பளுகாமம் அம்பிலாந்துறைப் பகுதி நோக்கி முன்னேறிய விசேட அதிரடிப்படையினருடன் இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் வீரவேங்கை தவமாலன் (கணேசமூர்த்தி லோகேந்திரன் - மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.(ஐ-164)

### திருநெல்வேலியில் ஓடு பிரித்து வீட்டில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.30

இரவேளை மழைபெய்து கொண்டிருந்த சமயம் திருநெல்வேலிப் பகுதியிலுள்ள ஒரு வீட்டில் ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்.

திருநெல்வேலி அம்மன் வீதியில் வசித்து வந்த யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதி ஒருவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

கூரையைப் பிரித்து உள்ளே இறங்கியவர்கள் தாலிக்கொடி, சங்கிலிகள், மோதிரம், கைச்சங்கிலி போன்ற பவுண் நகைகளையும் 42 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

அத்துடன் வீட்டு உரிமையாளரின் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை.

நாய் குரைக்கும் சத்தம்கேட்டு கண்விழித்து வெளியே வந்தபோது, சில ஆவணங்கள் முற்றத்தில் மழை வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டனர் வீட்டார். அதன் பின்னரே தமது வீட்டில் திருட்டுப் போயிருப்பது தெரிந்தது. இது தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(க-4)

---

# வாசகர் திருமுகம்

## யாரும் கண்டுபிடிக்காத ஆங்கிலமா?

16.10.2001ஆம் திகதிய உதயனில் வாசகர் திருமுகம் பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருந்த "யாரும் கண்டுபிடித்த ஆங்கிலம் அல்ல" என்ற கடிதம் தொடர்பாக பின்வருவனவற்றைத் தெரிவிக்கின்றேன்.

ஆங்கிலப் பேச்சு வழக்கில் Interjections, Slangs, Neologism என்னும் மூன்று அம்சங்கள் உள்ளன.

மனிதன் தனது இன்ப துன்பங்கள், விருப்பு வெறுப்புக்கள் என்பனவற்றைத் திடீரென வெளியிடும் Ah, Aha, Alack, Alas, Bah, Bosh, Pooh-Pooh, Egod, Hurrah, Hey என்பனவே Interjections எனப்படும்.

இவை பேச்சில் (அல்லது வசனத்தில்) வரும்போது ஏனைய சொற்களுடன் இலக்கண ரீதியில் தொடர்பற்றனவாகவும் கருத்தற்றனவாகவும் இருக்கும். உதாரணம்:-

Hurrah! We have won.
Alas! He is dead.

உண்மையில் இவை வெறும் ஒலிக்குறிப்புக்களே. எனினும் அவை வசனத்தில் "எறியப்படும்"போது மிகப்பலமான உணர்வுகளை அல்லது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவனவாக இருக்கும். அந்த ரீதியில்தான் அவை முக்கியத்துவம் பெறுகின்றன.

எனவே அவற்றை "யாரும் கண்டுபிடித்த ஆங்கிலம் அல்ல" எனக் கூறுவதும் HAY என்பது How are you? என்பதன் சுருக்கம் (அப்படியாயின் HEY என்பதன் விரிவு யாதோ?) எனக் காட்டமுயல்வதும் அபத்தமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் "Well" என்பதையும் நோக்க வேண்டும்.

"Have you stopped beating your wife?"

"Well, I don't beat anybody"

இந்தப் பதிலில் Wellஇன் பொருள் யாது? அகராதி நல்லது, கிணறு என்றுதானே கூறுகிறது. ஆனால் இங்கு Wellக்குக் கருத்தில்லை. அது ஓர் இடைவெளி நிரப்பி (Gap filler) அல்லது இராசதந்திரச் சொல். அவ்வளவுதான்.

இரண்டாவது அம்சமான Slang என்பது பாமரமக்கள் வாயிலிருந்து வருவதாகும். எனவே அவற்றை "இழிசனர் வழக்கு" என்பவர்களும் உள்ளனர். ஆனால் இதுவே ஆங்கிலப் பேச்சுவழக்கின் மிளகு, உப்பு, வாசனைத்திரவியம் எனப்படுகிறது. இவற்றின் அருமை, பெருமை தெரிந்து உபயோகிக்கப்படுவது போன்று Slangகும் உபயோகிக்கப்பட வேண்டும். உதாரணமாக Swell என்பதைக் காட்டலாம். இது big என்பதற்கான Slang. ஆனால் Swell time, a swell guy, a swell house, a swell party என உபயோகப்படுத்தப்படுவதில்லை. எனினும் நூற்றுக்கணக்கான Slangகுகள் தமது இழிசனர் நிலையிலிருந்து உயர்சனா நிலைக்கு வந்துவிட்டன. உதாரணம்:- nice, raise, fun, coax, banter, glee, farce, fizzle, bilk etc. இவற்றை யாரும் கண்டுபிடித்த ஆங்கிலம் அல்ல எனலாமா?

மூன்றாவது அம்சம் Neologism என்னும் புதுச் சொற்களாகும். இவை பல வழிகளில் தோன்றும். அவற்றுள் ஒன்றுதான் "சுருக்கம்". உதாரணம்: AIDS என்பது Acquired Immune Deficiency Syndrome என்பதன் சுருக்கம். CARE என்பது Co-operative American Relief Everywhere என்பதன் சுருக்கம். இவைபோன்று உருவாக்கப்பட்டனவே Unicef, Unesco என்பன. இன்று பெருவழக்கிலுள்ள OKயும் அத்தகையதே. அது இலத்தீன் மொழியிலிருந்து வந்ததாயின் அச்சொல்தான் யாதோ?

நாமறிந்தளவில் OK ஒரு Made in America. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்க இடையர்கள் (Cowboys) தம்மை நடை, உடை, பாவனை, பேச்சு என்பனவற்றால் வேறுபடுத்திக் காட்டமுனைந்து ஆங்கிலச் சொற்களை ஒருவிதப் புதுப்பாணியில் உச்சரித்தனராம். அவர்கள் All Correct என்பதை Ol Korrect என உச்சரித்தனர் எனவும் நாளடைவில் சோம்பல் காரணமாக OK என்றனர் எனவும் அதுவே இன்று Okay ஆகி அகராதியிலும் இடம்பிடித்துக்கொண்டது எனவும் கூறப்படுகிறது.

அந்த இடையர்கள் போன்று அமெரிக்க வேட்டைக்காரரும் Halloo என்னும் சொல்லைத் தந்துள்ளனர். அவர்கள் தமது வேட்டை நாய்களை Hal, Loo எனக் கூவி அழைத்தனர். அந்த Hunting cryயே இன்றைய Halloo ஆகும். இவையெல்லாம் யாரும் கண்டுபிடிக்காத ஆங்கிலமா?

*புலோலி.* - *சி.இரத்தினம்.*

## யாழ்.ஆயரின் கூற்றுக்கு சாயி அன்பர்கள் செயல்வடிவம்

24.10.2001ஆம் திகதிய உதயனின் ஆசிரியர் தலையங்கப் பகுதியில் யாழ்.ஆயர் கூறிய கருத்துக்களைப் பாராட்டி எழுதியுள்ளீர்கள். ஆயர் தனது உரையில், தனிமனித சாதனை, குடும்ப சாதனை, சமூக சாதனையாக மலரவேண்டும் என்ற கருத்தை மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளார். இதேகருத்தை வலியுறுத்தி பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்களும் பல நடவடிக்கைகளை உலகளாவிய ரீதியில் முன்னெடுத்துள்ளார்.

பகவான் உலகம் முழுவதும் வியாழக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் பஜனை ஒலிக்கச் செய்ததும், இதேகாரணத்துக்காகத்தான் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சாயி அடியார்களும் ஒக்ரோபர் 9ஆம் திகதிமுதல் நவம்பர் 22ஆம் திகதிவரை 45 நாள் சாதனை செய்துவருகின்றனர்.

இரவு 7 மணிமுதல் 7.30 மணிவரை சுமார் அரைமணித்தியால சாதனையில் ஈடுபடுகின்றனர். முதல் 20 நிமிடம் தேவாரம், காயத்திரி மந்திரம், புனித நூலகள் வாசித்தல், கீதங்கள் பாடுதல் போன்றவற்றுக்காகவும் இறுதி 10 நிமிடமும் தியானம் (7.20 - 7.30வரை) நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்படவேண்டும் என்பதற்காகவும் பிரார்த்தனை நடத்தப்படுகின்றது.

இந்தப் பிரார்த்தனைகளில் விசேட அம்சம் என்னவெனில் இச்சாதனை அவரவர் வீட்டு பூசையறையில் நடைபெறுவதால் குடும்பத்தினர் அனைவரும் பங்குபற்ற வாய்ப்புள்ளமையாகும். அடுத்து எல்லோரும் இணைந்து ஒரேநேரத்தில் செய்யும் பிரார்த்தனை நாட்டில் நல்ல அதிர்வுகளை ஏற்படுத்தும். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு தனிமனிதனும் இப்பிரார்த்தனையில் ஈடுபடுகின்றான். குடும்பத்தினருடன் இணைந்து பிரார்த்திக்கின்றான். அடுத்து சமூக நன்மைக்காக எல்லோரும் இணைவதால் இச்சாதனை மூலம் தனிமனிதன், குடும்பம், சமூகம் ஆகிய மூன்றும் இணைக்கப்படுகின்றது.

இதேபோல், நவம்பர் 11ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிமுதல 12ஆம் திகதி ஞாயிறு மாலை 6மணிவரை அகில உலகம் முழுவதிலுமுள்ள சாயி நிலையங்களில் 24 மணிநேர அகண்ட பஜனை நடைபெறவுள்ளது. பூமி சூரியனை ஒருமுறை வலம்வரும்போது உலகம் முழுவதும் பஜனை ஒலி எழுந்து உலகத்தில் நல்ல அதிர்வுகள் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே பகவான் பாபா இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

இந்தியாவிலுள்ள சுமார் 5,000 நிலையங்களிலும், உலகம் முழுவதுமுள்ள 165 நாடுகளில் சுமார் 3,000 ஆயிரம் நிலையங்களிலும் இந்த மாபெரும் பஜனை சாதனை நடைபெறவுள்ளது. அதிவணக்கத்துக்குரிய யாழ்.ஆயர் அவர்களின் சரியான கருத்துக்கு இதன்மூலம் செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது எனலாம்.

*தாவடி.*

**எஸ்.ஆர்.சரவணபவன்**
(வடபிராந்திய ஆன்மீக இணைப்பாளர்,
ஸ்ரீ சத்திய சாயி நிறுவனம்)

# வன்செயல் அற்ற சூழ்நிலை வந்ததும் தேர்தல் களத்தில் நிச்சயம் குதிப்போம்

## தமிழ் மூத்தோர் கல்விமான்கள் பேரவை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.30

வன்செயல்கள் இல்லாத - நல்ல சூழ்நிலை வரும்வரை காத்திருக்கிறோம். அவ்வாறான சூழ்நிலை வந்ததும் நிச்சயம் தேர்தல் களத்தில் குதிப்போம்.

- இவ்வாறு தமிழ் மூத்தோர் கல்விமான்கள் பேரவை அறிவித்துள்ளது.


இந்தப் பேரவைத் தலைவரான என்.சி.எஸ்.சுந்தரம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மூத்தோர் கல்விமான்கள் பேரவை 1988 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சியாகும். கட்சியைப் பதிவு செய்வதற்கு நான்கு தடவைகள் உரிய இடத்தில் தொடர்பு கொண்டிருந்தும் இன்றுவரை பதிவு செய்யப்படவில்லை. யாழ்.மாவட்டத்தில் அதிகாரபூர்வமாகப் பணம் படைத்தவர்களால் ஆரம்பிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டு இயங்குகின்ற கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஏழைத் தொழிலாள, விவசாய வர்க்கத்தினருக்கும் சிறுபான்மையினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்குவதில்லை.

பல்வேறு அடக்குமுறைகளுக்கு மத்தியில் அல்லற்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர்களை முன்னிலைப் படுத்தி தேர்தல் களத்தில் குதித்துள்ள கட்சிகள், தமது பதவிகளைத தக்கவைப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்களே தவிர, உண்மையில் தமிழ் மக்களின் ஆரோக்கியமான வாழ்வில் சிறிதளவேனும் அக்கறை கொண்டவர்களாக இல்லை என்பது எமது திடமான நிலைப்பாடாகும்.

எனவே நடைபெறவிருக்கும் தேர்தலில் பேரவை சார்பில் பங்கு கொண்டு யதார்த்த நிலையை மக்கள் மத்தியில் பரப்ப விரும்பினோம். ஆனால் அதற்கு உகந்த சூழ்நிலை தற்போது இன்மையாலும், வன்செயல்கள் மலிந்து கிடப்பதாலும் உரிய சூழ்நிலை வரும்வரை தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்துள்ளோம் என்பதை மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.(க)



தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் கொழும்பில் போட்டியிடும் அணியின் முதன்மை வேட்பாளர் சபாபதிப்பிள்ளை பத்மநாதன் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்காகத் தனது ஆதரவாளர்களுடன் தேர்தல் அலுவலகத்துக்குச் சென்றபோது எடுக்கப்பட்ட படம். தேர்தல் அலுவலகத்துக்குச் செல்லும் வழியைப் பொலீஸார் ஒருவர் அவருக்குக் காட்டுகிறார். (ஐ)

## பொ.ஐ.முவின் தேர்தல் விஞ்ஞாபனம்

கொழும்பு,ஒக்.30

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் இந்த வாரம் அனுராதபுரத்தில் நடத்தப்படும் மதச் சடங்குகளின் பின்னர் வெளியிடப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

தென்னிலங்கையில் பல அரசியல் கட்சிகள் ஞாயிறுமுதல் தமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றன. (ஐ-6)

## புனிதர்கள் தினம்

குருநகர்,ஒக்.30

நாளைமறுதினம் முதலாம் திகதி வியாழக்கிழமை புனிதர்கள் தினமாகவும், மறுநாள் வெள்ளிக்கிழமை இறந்த ஆத்துமாக்கள் தினமாகவும் கிறிஸ்தவர்கள் நினைவு கூர்வர்.

இவ்விரு தினங்களிலும் கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (க-51)

# கால்நடை வைத்திய உப அலுவலகத்தை அச்சுவேலியில் நிறுவுமாறு கோரிக்கை

அச்சுவேலி,ஒக்.30

கோப்பாய் கால்நடை வைத்தியர் அலுவலகத்தின் சேவையை அச்சுவேலியில் உப அலுவலகம் நிறுவி விஸ்தரிக்குமாறு அச்சுவேலிப் பகுதி விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

அச்சுவேலியில் கால்நடை வைத்தியர் அலுவலகத்தின் உப அலுவலகத்தை நிறுவுமாறு வடபிராந்திய கால்நடை உற்பத்தி - சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச கால்நடை வைத்தியர் அலுவலகம் நீர்வேலியில் செயற்பட்டு வருகின்றது.

நீர்வேலியில் வாரத்தில் முழு நாளும் செயற்படும் அலுவலகத்தின் சேவையை வாரந்தோறும் குறித்து ஒதுக்கப்பட்ட தினங்களில் அச்சுவேலியில் செயற்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் -

அச்சுவேலி கால்நடை வைத்தியர் உபஅலுவலகம் செயற்பட்டால் இடைக்காடு, விளான், தம்பாலை, பத்தமேனி, அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், அச்செழுப்பகுதி விவசாயிகள, பொதுமக்கள் சிரமமின்றி தமது தேவைகளை நிறைவு செய்யமுடியும் என்றும் கோரிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (க-11)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்

செல்வன் என்.அகிலன் அவர்களின் அன்புச் சகோதரி

தமயந்தி நாகராஜா

அவர்கள் 17-10-2001 இல் காலமானதையிட்டு நாம் மிகுந்த கவலை அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அமரருக்கு கண்ணீர்க் காணிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றேன்.


ஆத்மா சாந்தி அடைவதாக!

2ஆம் வருட

யாழ்.பல்கலைக்கழகம். முகாமைத்துவ மாணவர்கள் (94028)



## பிறந்த நாள் நினைவலைகள்



பிறப்பு 1953 - 10 - 30

இறப்பு 2000 - 07 - 18

அமரர் கந்தசாமி தர்மேசன்

(திட்டமிடல் உதவியாளர் - வலிகாமம் கல்வி வலயம்; மாவட்ட உதவிச் சாரண ஆணையாளர்-காங்கேசன்துறை மாவட்டம்)

மின்னாமல் முழங்காமல் மறைந்திட்ட - நம்
குடும்பத்தின் தலைவரே! - உம்
ஆறெட்டாண்டுப் பிறந்த நாள் இன்று
அஞ்சலித்து உமை வணங்குகின்றோம்.

உங்கள் நினைவோடு வாழும்:
மனைவி, முத்தரன்கள்.

'தரன் இல்லம்'
தேவாலய வீதி,
மூளாய், சுழிபுரம்.

(94020)


## குடாநாட்டு மக்களுக்கு எச்சரிக்கை

# காய்கறிப் பயிர்களுக்கு அளவுக்கதிகமான கிருமிநாசினிகள் விசிறுவதால் ஆபத்து!

## புற்றுநோய், நீரிழிவு ஏற்படுவதற்கும் வாய்ப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.30

விவசாயிகள் இலாப நோக்கத்துடன் காய்கறிப் பயிர்களுக்கு கண்களை மூடிக்கொண்டு - அளவுக்கதிகமாக - கிருமிநாசினிகளை விசிறுகின்றனர். இதனால் பாதிக்கப்படுவது எம்மக்களே. நச்சுத் தன்மை ஊறிய இந்தக் காய் கறிகளை உண்பதால் நோய்கள் பல ஏற்படுவதுடன் ஆயுளும் குறைகிறது.

- இவ்வாறு எச்சரித்திருக்கிறார். திருநெல்வேலி விவசாயப் பயிற்சிக் கல்லூரி முகாமையாளர் ச.சிவனேசன்.

வீட்டுத்தோட்டங்களில் காய் கறிகளைப் பயிரிட்டுப் பயன்படுத்துவதன மூலம் நோயற்ற, தேக ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும் என்றும் அவர் ஆலோசனை கூறியுள்ளார்.

குடாநாட்டில் விவசாயிகளில் பலரும் தங்களின் வருமானத்தை - இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றனர். சிலர் அறியாமை காரணமாகவும் அளவுக்கதிகமான கிருமிநாசினிகளைப் பாவிக்கின்றனர்.

இதனால் காய்கறிப் பயிர்கள் நச்சுத்தன்மை கொண்டவையாக இருக்கின்றன. இவற்றை உண்பவர்கள் புற்று நோய், நீரிழிவு, அல்சர் போன்ற நோய்களுக்கு விரைவில் ஆளாகிவிடுகின்றனர். இது புள்ளிவிவரங்கள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, காய்கறிகளை வீட்டுத்தோட்டமாகவும், இடவசதிகள் குறைந்தவர்கள் சாடிகள் மூலமாகவும் பயிரிட்டு பாவிப்பதன் மூலம் ஒவ்வொருவரும் நீண்டகால ஆயுளுடன் வாழ முடியும்.

இந்த வீட்டுத் தோட்ட மாதிரிகளை திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் பார்வையிட முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(க-180)

## பரிசளிப்பு விழா

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு அதிபர் அ.கமலநாதன் தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். (க-ரி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 07 - 12 - 1969

ஆண்டவன் அடியில் 10 - 11 - 2000

அமரர் திருச்செல்வம் நவச்செல்வம்

மொட்டவிழும் புன்னகையும் மோகனச் சிரிப்பும்
கட்டழகு கொண்ட உன்முகமும் - எம் காதில் நீ
தூவுகின்ற இசை மழையும்
விட்டகல மாட்டாமல் விக்குகின்ற என் நெஞ்சை
விட்டுவிட்டு விண்ணமர்ந்த தேனோ? - செல்வன் நீ
வீடு வந்தா சேராயோ ......?

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி!

உமது பிரிவால் துயருறும்:
பெற்றோர், அக்கா, தம்பி,
மைத்துனர், மைத்துனி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

(94039)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 18 - 05 - 1932

மறைவு 02 - 10 - 2001

அமரர் தம்பையா தியாகராஜா

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து மறைந்த உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

02.10.2001 அன்று சிவபதமெய்திய அமரர் தம்பையா தியாகராஜா அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (30.10.2001) செவ்வாய்க்கிழமையும், சபிண்டீகரணக்கிரியைகள் நாளைமறுதினம் (01.11.2001) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

ஆதலால் அத்தினம் (01.11.2001) எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

இராஜ வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

(93853)

[ ஐ. தே. க. ஆட்சி அமைப்பது உறுதி ]

# பிரெஞ்சு அரசமைப்பை ஒத்த நிர்வாகத்தை ஏற்படுத்துவோம்

## செய்தியாளர் மாநாட்டில் ரணில்

கொழும்பு, ஒக். 30

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றியீட்டி ஆட்சி அமைப்பது உறுதி. அதன்பின் நகட்டில் பிரெஞ்சு அரசமைப்பை ஒத்த நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது :–

விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் வரை எந்தப்பேச்சுக்களும் நடத்தப்படமாட்டாது என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியா, நோர்வே, அமெரிக்கா மற்றும் மேற்குலகிற்கு உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் அறிவித்தால் ஐ.தே.கவும் தனது நிலைப்பாட்டை அறிவித்து அந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறது. ஆனால், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுமென கூறிக்கொண்டு அதே சமயம், ஐ.தே.கட்சி புலிகளுடன் உடன்படிக்கை செய்துள்ளதாகப் பிரசாரம் செய்வது குறுகிய அரசியல் இலாபம் பெறும் நோக்கத்தைக் கொண்டது என்றும் சாடினார் ரணில்.

ஐ.தே.க வுக்கு எதிரான கட்சிகள் மத்தியில் நல்லுறவைப்பேணுவதற்காகக்குழுவொன்றை அமைத்திருப்பதாகக் கூறிய அவர், தேர்தலில் வென்றபின் அமைச்சரவையும், நாடாளுமன்றமும் ஐ. தே. க விடம் இருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க தமது பதவியில் தொடர்ந்திருப்பது குறித்து எந்த விதமான பிரச்சினையும் இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரான்ஸில் இத்தகைய நடைமுறை பலகாலம் நீடித்திருப்பதாகவும் (ஜனாதிபதி ஒருகட்சி, அரசாங்கம் மற்றொரு கட்சி) இங்கும் அத்தகையதான அரசாங்கம் என்று அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொருமுறை இடம் பெறும் தேர்தலின் போதும் ஐ. தே. கட்சி புலிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதெனப் பிரசாரக் குண்டை வெடிக்கவைப்பது ஜனாதிபதியினதும், பொது ஜன ஐக்கிய முன்னணியினதும் கலாசாரமாக மாறிவிட்டது. மக்களைத் திசை திருப்பி வாக்குகளைப் பெறுவதே இதன் முக்கிய நோக்கமாகும். அதைவிடுத்து இக்குற்றச்சாட்டில் எதுவித உண்மையுமில்லை.

இன்று ஐ. தே. கட்சி புலிகளுடன் தொடர்பு என்று குற்றஞ்சாட்டும் ஜனாதிபதி, அன்று பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து புலிகள் இயக்கத்தைப் பேச்சுவார்த்தைக்கு முன்வருமாறு கூட்டறிக்கை விட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார் — என்றார் ரணில்

### ஜி. எல். பீரிஸ் பேச்சு

தேர்தல் நீதியாகவும், சுயாதீனமானதுமான சூழலில் நடத்தப்படுவதற்காக பொலீஸாருக்குக் கட்டளையிடும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு இருக்கிறது என்று பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

17 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு ஏற்ப சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்குப் பொலீஸாரின் உதவியைப் பெறவும், கட்டளைகளையும், அறிவுறுத்தல்களையும் வழங்க தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளது என்றும்பீரிஸ்சொன்னார். (க)

ப. நோ. கூ. சங்கக் கிளைகளில்

# நிவாரணப் பொருள்களை களஞ்சியப்படுத்துவதில் சிரமம்

தென்மராட்சி, ஒக். 30

நிவாரணப் பொருள்களை மாதத்தின் முதல் வாரத்தில் கொடுத்து முடிக்க வேண்டுமென யாழ். மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அறிவித்தல் வழங்கிய போதிலும், பல இடம்பெயர்ந்த மக்கள் நிவாரணத்தைப்பெறுவதில்காலதாமதம் காட்டுவதால் அடுத்த மாதத்திற்குரிய பொருள்களை களஞ்சியப்படுத்துவதில் பல நோக்குக் கூட்டுறவுக் கிளைக் கடைகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர் மாதத்திற்குரிய நிவாரணத்தை விநியோகத்திற்காக கிளைக் கடைகளுக்கு வழங்க சங்கத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள வேளையில், ஒக்ரோபர் மாதத்திற்குரிய நிவாரணப் பொருள்கள் இதுவரை பெற்றுக்கொள்ளாததால் இந்தப் பொருள்களைக் களஞ்சியப் படுத்துவதில் கிளைக்கடைகளில்இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-117)

முதுகல்வி மாணி கற்கைநெறி:

# ஒரு வருடப்படிப்பு லீவு வசதியை பெறுவதில் ஆசிரியர் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக். 30

முதுகல்விமாணி கற்கை நெறியில் பதிவு செய்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஒருவருட காலப் படிப்பு லீவுவசதியை யாழ். மாவட்ட ஆசிரியர்கள் உரிய காலப்பகுதியில் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் திண்டாடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கற்கை நெறிக்குப் பதிவு செய்து கற்கைநெறி ஆரம்பிக்கும் தினத்தில் இருந்து ஒருவருட காலத்திற்கு படிப்பு லீவு பெறுவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ள போதிலும் உரிய வேளையில் படிப்புலீவு அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

உரிய முறையில் விண்ணப்பிப்பதற்கு அதிபர்கள், அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கப் பின்னடிப்பதும்; விண்ணப்பித்தாலும் அதற்கான அனுமதி கிடைப்பதில் உள்ள காலதாமதமே காரணம் என்றும் கூறப்பட்டது. (க–11)

யாழ்ப்பாணம் வருவதற்காக

# திருமலையில் கப்பலுக்காக காத்திருக்கும்பல்கலை மாணவர்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ். பல்கலைக்கழகப் புகுமுக மாணவர்கள் மற்றும் சிரேஷ்ட மாணவர்கள் பலர் யாழ்ப்பாணம் வருவதற்காகத் திருகோணமலையில் காத்து நிற்பதாக அங்கிருந்து வந்த பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற சிரேஷ்ட மாணவர்கள் தமது விடுமுறைக்காக வெளிமாவட்டங்களுக்குச் சென்றிருந்தனர், அவர்களுடன் புகுமுக மாணவர்களும் இணைந்து யாழ்ப்பாணம் வருவதற்காகத் திருகோணமலைக்கு வந்து நிற்பதாகவும்—

இவர்களுக்கான பயணச்சிட்டைகளை வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாகவே சுமார் 20 நாள்களுக்கும் மேலாகத் திருகோணமலையில் அவர்கள் தங்கி நிற்பதாகவும் அவர்களுடன் நின்று யாழ். வந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை—

யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட மாணவர்களுக்கும், புகுமுக மாணவர்களுக்குமான விரிவுரை வகுப்புகள் யாவும் கடந்த முதலாம் திகதியே ஆரம்பமாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-6)

# வணிகப் போட்டி.

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ். கல்வி வலயப் பாடசாலை மட்ட வணிகப் போட்டி இன்று பகல் 12 மணிக்கு யாழ். பணிமனையில் நடைபெறும் என்று கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

# மல்லாகம்பகுதியில் 3 திருட்டுக்கள்

கடந்த சில தினங்களில் தொடர்ச்சியாகப் பெய்த மழையின் போது மல்லாகம் பகுதியில் மூன்று இடங்களில் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

மல்லாகம் கோட்டைக்காடு கந்தசாமி ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டுள்ளதுடன் அண்மையாக உள்ள அண்ணமார் ஆலயத்திலும் சுமார் இரண்டு பவுண் சங்கிலி திருடப்பட்டுள்ளது.

இவற்றைவிட தனியாருக்குச் சொந்தமான கடை ஒன்றும் உடைக்கப்பட்டு அங்கிருந்த பீன்ரின்கள், பால்மா டக்கட்டுகள் உட்பட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் இது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(க -86)

# மிகவும் மோசமான நிலையில் எழுவை தீவின் பிரதான வீதி.

## மீனவர் தொழிலுக்குச் செல்வதில் சிரமம்

ஊர்காவற்றுறை, ஒக் 30

எழுவைதீவில் பிரதான வீதி கடந்த இருபது வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாததால் மிகவும் மோசமாகக் காணப்படுகிறது.

தற்போது மழைகால மாகையால் குழிகளில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் இவ்வீதியால் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப் பகுதியிலுள்ள மீனவர்களுக்கும் அதிகாலை வேளையில் கடலுக்குச் செல்வதற்கும், மீன்வகைகளை எடுத்து வருவதற்கும் இவ்வீதியையே பயன்படுத்தி வருகின்றனர். இந்தச் சந்தர்ப்பங்களில் தங்களின் சைக்கிள்கள் சேதமடைந்து விடுவதால் தொழில் பாதிக்கப்படுவதாக அவர்கள் புகார் கூறுகின்றனர். (க-16

# முதன்மை ஆசிரியருக்கு!

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ். வலயத்தைச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்களை இன்று நண்பகல் 12 மணிக்கு வலய பணிமனைக்குச் சமுகமளிக்குமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(க)

யாழ். ஆஸ்பத்திரி பதிவேட்டின்படி

# குடாநாட்டில் வீதி விபத்துகளில் இவ்வருடம் 460 பேர் காயம்

## 9 பேர் உயிரிழந்துள்ளனர்

யாழ்ப்பாணம், ஒக். 30

குடாநாட்டில் வீதி விபத்துக்களில் காயமடைந்த 460 பேர் இந்த வருடத்தில்— கடந்த 10 மாத காலப் பகுதியில்—யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். 9 பேர் விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் புள்ளி விவரம் யாழ். ஆஸ்பத்திரி பொலீஸ் பதிவுகள் மூலம் பெறப்பட்டது. இதனைவிடப் பருத்தித்துறை வைத்தியசாலை மற்றும் குடாநாட்டின் ஏனைய ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றோரின் எண்ணிக்கையையும் சேர்த்தால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கைமேலும் அதிகரிக்கும்.

குடாநாட்டில் இடம்பெற்ற விபத்துக்களில் மோட்டார் சைக்கிள், சைக்கிளுடன் தொடர்புடைய விபத்துக்களே அதிகம் என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

(க-180)

# பாடசாலைகளுக்கு தளபாடங்களை 'யுனிசெவ்'வழங்கும்

வடமராட்சி கிழக்கு, ஒக். 30

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் போர்ச் சூழலினால் இடம் பெயர்ந்த பாடசாலைகளிலும் மற்றும் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளிலும் நிலவுகின்ற தளபாட பற்றாக்குறையை நீக்குவதற்கு, "யுனிசெவ்" நிறுவனம் உதவி வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிறுவனம் இதற்கென விசேட செயற்றிட்டத்தை வகுத்துள்ளது.

இதற்காக பாடசாலைகளில் நிலவும் தளபாடப் பற்றாக்குறை சம்பந்தமான விவரங்களை வட, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கோரியுள்ளது.

(க–182)

# மலசலகூடங்கள் அமைக்க நிதியுதவி

வலி. கிழக்கு, ஒக். 30

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கோப்பாய் மத்தி கிராமஉத்தியோகத்தர் பிரிவில் வசதி குறைந்த 20 குடும்பங்களுக்கு ''யுனிசெவ்'' நிறுவனம் புதிய மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இந்த மலசல கூடத்திற்கு தலா 15 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் நிதி வழங்கப்படவுள்ளதாகப் பிரதேசசெயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க–180)

கரணவாய் குஞ்சர்கடைச்சந்தியில் நின்ற

# மோட்டார் சைக்கிளால் ஞாயிறன்று பெரும் பரபரப்பு

தென்மராட்சி, ஒக். 30

கரணவாய் குஞ்சர்கடைச் சந்தி கடையொன்றின் முன்னால் அநாதரவாகக் காணப்பட்ட மோட்டார்சைக்கிளால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறு காலை இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் கடையொன்றின் முன்னால் நிறுத்திவிட்டு தேநீர் அருந்திய பின்னர் அங்கு வந்த லாண்ட்மாஸ்டர் ஒன்றில் ஏறி மண்டான் பகுதிக்குச் சென்றுவிட்டாராம்.

ஒருமணித்தியாலமாக அங்கு மோட்டார் சைக்கிள் நின்றதையடுத்து கடை உரிமையாளர் அருகில் உள்ள படை முகாமுக்குத் தெரியப்படுத்தினார். இதனையடுத்து இப்பகுதிக்குப்பெருமளவு படையினரும் குண்டு செயலிழக்கும் பிரிவினரும் வரவழைக்கப்பட்டு மோட்டார் சைக்கிள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதனால் பருத்தித்துறை — யாழ்ப்பாணம் போக்கு வரத்துக்கள் சிறிது நேரம் நிறுத்தப்பட்டது. அவ்வேளையில் மோட்டார் சைக்கிளை விட்டுச் சென்ற இளைஞர் அங்கு வந்து நடந்த விவரம் தெரியாமல் மோட்டார் சைக்கிளுக்கு அருகில் சென்று உரிமை கோரியபோது பரிசோதனையில் ஈடுபட்டவர்கள் இளைஞனை தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் இப்பகுதியில் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் வெடித்து வாகனத்தில் வந்த படை அதிகாரி உட்பட 7 பேர் பலியானது தெரிந்ததே.

இச்சம்பவம் நடந்த இடத்திலிருந்து 50 யார் தூரத்தில் உள்ள கடையின் முன்பே மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-117)

# நாடாளுமன்றத்தில் உங்கள் பிரதிநிதி ஆற்றிய உரை....



தி.மகேஸ்வரன்

தமிழ் இனத்தை முற்றுமுழுதாக அழிப்பதற்காகப் பாதுகாப்புத்துறைக்குப் பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்துள்ள வரவு - செலவுத்திட்டம் இது.

தனது ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைப்பதற்காகவே பொ.ஐ.மு.அரசு பெருமளவு பணத்தைச் செலவிட்டு இந்த யுத்தத்தை நீடிக்கின்றது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் தமிழ் மக்களின் நலன்சார்ந்த விடயங்கள் ஏதுமில்லை.

இதில் கைத்தொழில்துறை, வெளிநாட்டு முதலீடு என்றெல்லாம் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் அவற்றில் தமிழருக்கு நன்மையளிக்கும் விடயம் ஏதுமில்லை.

### ஒரு லட்சம் வீடுகளை அழித்துவிட்டு மாளிகை கட்டும் ஜனாதிபதி

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான வீடுகள் குண்டுகள் வீசி அழிக்கப்பட்டுள்ளன. ஆனால் அதே நேரம் ஜனாதிபதி தனக்கு குளிரூட்டப்பட்ட, மலசலகூட வசதியுடன் கூடிய புதிய மாளிகையைக் கட்டுக்கின்ற விடயத்தில் மிகவும் அக்கறையாகவும், துரிதமாகவும் செயற்படுகின்றார். அமைச்சர்களும் அவரது எம்.பிக்களும் அதற்கு ஆதரவு நல்கக் கொண்டிருக்கின்றார்கள்.

புலிகளைப் பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் பல தடவைகள் அழைப்பு விடுத்திருந்தனர். அவர்களும் பேச்சுக்கு முன்வந்து மூன்று மாதத்திற்கு மேலாகிவிட்டது. ஆனால் அரசு அதை உதாசீனம் செய்து நடக்கின்றது. சில அமைச்சர்களும், பிரதிஅமைச்சர்களும் தமது பதவிகளைத் தக்கவைப்பதற்காக - யுத்ததைத் தொடர்ந்து நடத்த விரும்பி - அதற்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

### மின்சார, தொலைபேசிச் சீர்கேடு

யாழ்.குடாநாட்டில் மின்சார விநியோகம் மிகவும் சீர்கேடாகத் தொடர்கின்றது. அரசால் ஒப்பந்தம் வழங்கப்பட்ட 'கூல் எயர்' நிறுவனத்தின் மின்விநியோகம் மிகவும் மோசமாகவுள்ளது. அரசியல் செல்வாக்கால் மின்சார சபைக்குச் செலுத்தப்படும் நிதியையும், மின்சார சபைக்கு யாழ்.மக்களினால் செலுத்தப்படும் நிதியையும் இந்த நிறுவனம் சுரண்டிக்கொண்டிருக்கின்றது.

தொலைபேசி விவகாரத்திலும் குளறுபடி. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் 16ஆயிரம் ரூபா முற்பணத்துடன் கிடைக்கின்ற இணைபபை, யாழ்ப்பாணத்தில் 36ஆயிரம் ரூபா செலுத்தி யாழ்.மக்கள் பெறவேண்டியுள்ளது.

### மக்களைச் சுரண்டும் விமானப்படை

யாழ். - கொழும்பு போக்குவரத்துப் பிரச்சினையால் கடந்த ஏழு ஆண்டுகளாக யாழ். மாவட்டம் சீரழிந்துகொண்டிருக்கின்றது. ஒழுங்கான தரைவழிப்பாதை உள்ளபோதும் அரசு அதை மூடிவைத்துள்ளது.

இரண்டு லட்சம் ரூபா குத்தகையில் வாடகைக்கு விமானத்தை அமர்த்தி ஒரு தடவைக்கு மூன்றரை லட்சம் ரூபா இலாபத்துடன் விமான சேவை ஒன்றை விமானப்படை நடத்திக்கொண்டு இருக்கின்றது. இதன்மூலம் யாழ்.மக்களை விமானப்படை சுரண்டுகின்றது.

ஒரு பிரயாணி இந்த மார்க்கத்தில் பயணம் செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிபெற இருபது நாள்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. அந்த அனுமதி கிடைத்தபின் ரிக்கெற எடுக்க மேலும் பத்து நாள்கள் தவம் கிடக்க வேண்டியுள்ளது.

உரிய நேரத்தில் பயண அனுமதியை பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதால் தங்களுக்கு உற்றவர்களின் மரணவீடுகளில்கூட பங்குபற்ற முடியாத அவலநிலையில் தமிழ்மக்கள் உள்ளனர்.

### எனது மக்களின் விருப்பப்படியே நான் நடப்பேன்

விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டாம் என்று கோரி நான் ஒப்பமிட்டதாகத் தெரிவித்து அது தொடர்பான படங்களை அமைச்சர் அனுருத்த ரத்வத்த இங்கு காட்டியிருக்கின்றார். பிரிட்டனில் புலிகளைத் தடைசெய்வதை ஆட்சேபித்து யாழ்.குடாநாட்டில் மூன்று லட்சம் மக்கள் ஒப்பமிட்டுள்ளனர். நான் அந்த மாவட்ட மக்களின் பிரதிநிதி என்ற முறையில் அந்த மக்களின் அபிலாசைப்படியே செயற்பட வேண்டிய கடப்பாடு உடையவன்.

விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வைப்பதன் மூலம் அரசு எவ்விதத்திலும் சமாதானத்தை எட்டப்போவதில்லை என்பதைத் தெட்டத்தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

எனது கையொப்பம் பற்றி பெரிதாகக் கூறும் அமைச்சர் அனுருத்த ரத்வத்த, 1995இல் யாழ்.மாவட்டத்தை இராணுவம் கைப்பற்றிய போது அறுநூறு பொதுமக்கள் கொலை செய்யப்பட்டதை மறந்துவிட்டார்; பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் அப்பாவி இளைஞர்கள் 25 பேர் கொலைசெய்யப்பட்டதை மறந்துவிட்டார்; அண்மையில் - மூன்று மாதஙகளுக்கு முன்னர் - மிருசுவிலில் எண்மர் படுகொலை செய்யப்பட்டதை மறந்துவிட்டார். இப்படியான கொலைகளைச் செய்தோருக்கு தலைமை தாங்குகின்ற அவர் எனது கையொப்பம் பற்றி இங்கு கூறவந்துவிட்டார்.

### நான் 'கொட்டியாவா'?

பிரதிஅமைச்சர் மேர்வின் சில்வா என்னைப் பார்த்து 'கொட்டியா!' என்று கூறுகினறார். ஆனால் நான் ஒருநாளும் ஆயுதம ஏந்தியதில்லை; ஆயுதத்தைத் தொட்டதுமில்லை; வேறு எந்த வன்முறையிலும் ஈடுபடாமல்தான் நான் இந்த நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளேன்.

நான் யாழ்.மாவட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மக்கள் பிரதிநிதியாகவே இங்கு வந்திருக்கிறேனேதவிர, எவருடைய முதுகையும் சொறிவதற்கு இங்கு வரவில்லை. அப்படியான செயற்பாடுகளுக்கு அரசுத் தரப்பில் இருக்கின்ற சில தமிழர்களைத்தான் தேடிக் கொள்ளவேண்டும். எம்மிடம் அப்படியான செயற்பாடுகளை எதிர்பார்க்கவேண்டாம்.

அமைச்சர் கதிர்காமர் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் நேரடியாக மக்களால் தெரிவுசெய்யப்படாத பிரதிநிதி. அவர் இரண்டாவது தடவையாகவும் நாடாளுமனறத்திற்கு வந்து உண்மைகளைத் திரிபுபடுத்தி, பொய்யான குற்றச்சாட்டுக்களையும், பொய்யான செய்திகளையும் உலக நாடுகளுக்குத் தெரிவித்துக கொண்டிருக்கின்றார்.

### பொதுநூலகப் புனரமைப்பில் நடக்கும் குளறுபடி

யாழ்.பொதுநூலகத்தைப் புனரமைப்பது குறித்து பல செய்திகளை வெளியிட்டு வெளிநாடுகளில் பல கோடி ரூபா நிதியைச் சேகரித்திருக்கின்றார். ஆனால் அங்கு புதிய கட்டடம் ஏதும் கட்டப்படவில்லை. எரிக்கப்பட்ட நூலகத்திற்கு பழையபடி சிமெந்து பூசப்பட்டுள்ளது. அந்த நூலகத்துக்கு புத்தகங்கள் ஏதும் அனுப்பப்படவுமில்லை. இந்த உண்மைகளை மூடிமறைப்பதற்காகவும், தமது பதவியைக் காப்பாற்றுவதற்காகவும் கதிர்காமர் இன்று உலக நாடுகள் எங்கும் தமிழர்களைத் தூற்றித் திரிகின்றார்.

*(17-03-2001 அன்று வரவு - செலவுத் திட்ட உரையில் )*

ஐக்கிய தேசியக் கட்சி

X

(93903)

## இழப்பீடுகளை மதிப்பிட

# சாவகச்சேரி சென்ற வணிகர்கள் நகருக்குள் நுழைய அனுமதி மறுப்பு

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் யுத்த அனர்த்தங்களால் வர்த்தக நிலையக் கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்வதற்கு சென்ற வணிகக் குழுவினர் படையினரால் நேற்றுமுன்தினம் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்களுக்கு ஏற்பட்ட இழப்பீடுகளைப் பெறுவதற்கான படிவத்துடன் மதிப்பீட்டுத் திணைக்கள அதிகாரியின் மதிப்பீட்டு அறிக்கையும் இணைக்கப்பட வேண்டும் என்பதால் சாவகச்சேரி வணிகர் மன்றத்தினர் தென்மராட்சிப் பிரதேச 521ஆவது படையணியுடன் தொடர்புகொண்டு சாவகச்சேரி செல்ல அனுமதி பெற்றிருந்தனர்.

இதன் பிரகாரம் வர்த்தகர்கள் மதிப்பீட்டு உத்தியோகத்தருடன் நேற்றுமுன்தினம் சென்றவேளையில் சாவகச்சேரி நகர்ப் பகுதிக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

வணிகர்களை கைதடியில் உள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் அனுமதி பெற்றுவருமாறு கூறப்பட்டதாகவும் -

அதனையடுத்து வர்த்தகர்களும் மதிப்பீட்டு அதிகாரியும் திரும்பியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

வர்த்தகர்கள் தமக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டதன் பயனாக வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை உரிய படிவங்களை வழங்கியபோதிலும் இணைப்பு அறிக்கைகள் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவது குறித்து வர்த்தகர்கள் விசனம் தெரிவித்தனர்.

சேதமடைந்த வர்த்தக நிலையங்களில் இம்மாத முற்பகுதியில் எடுக்கப்பட்ட பிலிம் சுருள் படையினரால் கைப்பற்றப்பட்டு இன்னமும் வழங்கப்படவில்லை எனவும் வணிகர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-117)

# 3 விபத்துகளில் நால்வர் காயம்!

யாழ்ப்பாணம்,ஒக்.30

குடாநாட்டில் நேற்று இடம்பெற்ற மூன்று வீதி விபத்துக்களில் நான்கு பொதுமக்கள் காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுக் காலை 7 மணியளவில் கலட்டிச் சந்தியில் இடம்பெற்ற கார் - மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் மோட்டார் சைக்கிளில் சென்ற நம்பன் கணேசலிங்கம்(வயது34 - பாரதிபுரம், பத்தமேனி, அச்சுவேலி) மற்றும் துரைராஜா யோகேஸ்வரன் (வயது 43 - யாழ்.வீதி, யாழ்ப்பாணம்) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

காரைநகர் செம்பாட்டுச் சந்தியில் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் மயிலன் அப்புத்துரை(வயது 49 - கல்லன்தாழ்வு, காரைநகர்) என்பவர் காலில் காயமடைந்தார்.

கந்தரோடை வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம் (வயது 38 - ஐயனார் வீதி, அம்பனை, சுன்னாகம்) என்பவர் காயமடைந்தார்.

(ஒ-6-9)


## 7ஆவது பிறந்த நாள் வாழ்த்து



ஜேர்மனியில் தனது இல்லத்தில்
இன்று (30.10.2001) செவ்வாய்க்கிழமை
7ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
சுந்தரலிங்கம் - விஜயகுமாரி தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

**விதுர்ஷன்**

பல கலைகளும் பெற்று பல்லாண்டு காலம்
சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

திரு.திருமதி ஆறுமுகம்
குடும்பத்தினர்.

(94057)



## பாராட்டுகின்றோம்

யா/நாவற்குழி மகா வித்தியாலய உப அதிபர்



**திருமதி வசந்தாதேவி மேகலிங்கம்**

B.A., Dip. in Edu., S.L.P.S. - I

கடமை, கண்ணியம், அன்பு, அரவணைப்பு மிக்க எமது பாடசாலை உப அதிபர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் 01.06.1996 முதல் அதிபர் சேவை தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகள் பெற இறையருளை வேண்டி நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
யா/நாவற்குழி மகா வித்தியாலயம், கைதடி.

(94045)



## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

★ எதிர்வரும் 01.11.2001 வியாழனன்று படச்சுருள்களும் வீடியோ கசற்றுக்களும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

நல்லூர்
021-2604

புலோலி
070-212720

(94049)


## சைவ சமய மேம்பாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.30

அளவெட்டி சைவ பரிபாலன சபையினால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் சைவசமய மேம்பாட்டுப் போட்டிகள் நாளை புதன்கிழமை அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரை, மனனம், பஜனை, பண்ணிசை ஆகியவற்றில் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (ஒ-6)

## வலி.மேற்கில் காணி வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.30

வலி. மேற்கு பிரதேச சபை, சங்கானை உப அலுவலகத்துக்கு உட்பட்ட 2 ஆம் வட்டாரத்தில் உள்ள குடியேற்றத் திட்டத்தில், கடந்த 25 வருடங்களாக உரிமையற்ற காணிகளில் வாழ்ந்துவரும் 30 குடும்பங்களுக்கு, அவர்கள் வாழும் காணிகள் சொந்தமாக விரைவில் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக, வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் தெரிவித்தார்.

(ஒ)

## சோதனைச்சாவடியில் பயணிகள் மூவரை விட்டுச்சென்றது பஸ்!

ஊர்காவற்றுறை,ஒக்.30

அல்லைப்பிட்டியில் உள்ள கடற்படையினரின் சோதனைச்சாவடியில் சோதனைக்காக பஸ்ஸிலிருந்து இறங்கிய பயணிகள் மூவரை விட்டுவிட்டு சுமார் 3மைல் தூரம் சென்ற பஸ்ஸை படையினர் மீண்டும் அல்லைப்பிட்டிக்கு திருப்பி அழைத்து குறித்த பயணிகளை ஏற்றி அனுப்பி வைத்தனர்.

கடந்த வாரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சோதனை நிலையத்தில் இறங்கிய பயணிகள் அனைவரும் மீண்டும் பஸ்ஸில் ஏற்றப்பட்டதாகக் கருதி சாரதி பஸ்ஸை எடுத்துச்சென்றுவிட்டார் என்றும் -

கடற்படையினர் மண்கும்பானில் அமைந்துள்ள தமது முகாமுடன் தொடர்புகொண்டு குறித்த பஸ்ஸை திருப்பி அழைத்து பயணிகளை அனுப்பி வைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-16)

## பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 21 வருடகாலமாக பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி வின்சன் பிலோமினா அவர்களின் சேவையைப்பாராட்டி யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பிரிவுபசார விழா ஒன்றை நடத்துகின்றது.

யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ள இந்த பிரிவுபசார விழாவில் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்கிறார். (ஒ-6)


**ராஜா** யாழ்ப்பாணம்

குணால், மோனல், கரன்
மற்றும் பலர் நடித்த

**பார்வை ஒன்றே போதுமே**

தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு : 10.30, 2.5 (புதிய நேரம்)

(C/18719)



**நாகம்ஸ்** சுன்னாகம்

M.G.R., ஜெயலலிதா,
நாகேஷ் நடித்த

**ஆயிரத்தில் ஒருவன்**

(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (பு.நே.)

(94052)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ராம்கி, ரம்யா கிருஷ்ணன்,
விவேக் நடித்த

**பாளையத்து அம்மன்**

(ரீல்ஸ்)
தினசரி காட்சிகள்:
11.00, 2.30, 5.30 (பு.நே.)



## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## முழுநிலா நாள் கருத்தரங்கு

| | | |
|---|---|---|
| இடம் | :- | கல்லூரி குமாரசுவாமி மண்டபம் |
| காலம் | :- | நாளை (31.10.2001) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி |
| தலைமை | :- | திரு.க.சி.குகதாசன் (முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) |
| கருத்துரை | :- | "தேர்தலும் சமாதானமும்" |
| வழங்குபவர் | :- | அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம் பங்குத் தந்தை, புனித யாகப்பர் ஆலயம் - யாழ்ப்பாணம். |

*அனைவரும் வருக.*

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

ஆதரவு:-
**சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்**
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2763

(C/18895)



## கல்விச் சமூகத்தின் நல்வாழ்த்துக்கள்



பல வருடகாலமாக
எங்கள் பல்கலைக்கழகத்தில்
சட்ட விரிவுரையாளராகப்
பணியாற்றிவரும்
இலங்கை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்

**திரு.பொன்.பூலோகசிங்கம்**

அவர்கள் அண்மையில் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிவலயத்திற்கு சமாதான நீதிபதியாகவும் பதில் நீதிவானாகவும் நியமிக்கப்பட்டமையை அறிந்து அகமிகமகிழ்கின்றோம்.

அவருக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(94050)



## WALK - IN - INTERVIEW
## POST OF ADMINISTRATIVE OFFICER

Wanted a well experienced Administrative officer to co-ordinate and direct the MANAGEMENT COUNCIL in the day to day work of the office of the ASSOCIATION for HEALTH AND COUNSELLING.

Recently retired persons in good health & without any encumbrances too can apply.

Interview between 9.30 a.m. and 12.30 p.m. on Wednesday 31st October 2001 at SHANTHIHAM.

**SHANTHIHAM**
*15, Kachcheri-Nallur Road,*
*Jaffna.*

T.P. - 3338

(C/18894)



## முதல்மாத நினைவஞ்சலியும் நினைவு நூல் வெளியீடும்

தோற்றம்
28
-
03
-
1913



மறைவு
01
-
10
-
2001

**திருமதி கந்தையா சின்னம்மா**

எமது அன்புத் தெய்வமான தாயாரின் முதல்மாத நினைவாக இன்று (30.10.2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலியிலும், 'பெண்ணின் சுவடுகள்' நினைவு நூல் வெளியீட்டிலும் பங்குகொள்வதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

பாடசாலை வீதி,
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

- பிள்ளைகள்,
சு.நாகேஸ்வரி,
க.தணிகாசலம்.

(94047)

வெளியிடங்களுக்கான

# தொலைபேசி இணைப்பு எடுப்பதில் தொல்லை!

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்குத் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக்கொள்வதில் கடந்த இரண்டு நாள்களாகப் பெருஞ்சிரமம் நிலவுகின்றது.

நள்ளிரவில் கூட இங்கிருந்து வெளியிடங்களுக்குத் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

வெளியிடங்களில் இருந்து அவ்வப்போது - சில சமயங்களில் மட்டும் - பெரும் சிரமத்துக்கு மத்தியில் தொலைபேசி அழைப்புகள் கிட்டுகின்றன.

இங்கிருந்து வெளியிடங்களுக்கு எடுக்கப்படும் இணைப்புகள்கூட எப்போதாவது இருந்துவிட்டுக் கிடைத்தாலும் அதுவும் ஓரிரு நிமிடங்களிலேயே தொடர்பு துண்டிக்கப்பட்டு விடுகின்றது.

இந்தத் தொலைத் தொடர்புச் சீர்குலைவுக்கான காரணங்கள் குறித்து விளக்கமளிக்க முடியாத இக்கட்டு நிலையில் 'ரெலிகொம்' வட்டாரங்கள் இருந்தமையும் அறிய முடிந்தது. (உ)

# ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்ததும் புலிகளுடன் பேச்சு நிச்சயம்

## அலிஸாகிர் மௌலானா உறுதி

கொழும்பு,ஒக்.30

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தால் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யப்பட்டு புலிகளுடன் பேச்சு நடத்தப்படும்.

- இவ்வாறு ஐ.தே.கட்சிப் பிரமுகர் அலிஸாகிர் மௌலானா தெரிவித்தார். மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக்கூறினார்.

பொ.ஐ.முன்னணியின் விசமப் பிரசாரங்களினால் ஐ.தே.கட்சி எந்த வகையிலும் பாதிக்கப்படாதென்றும் - எதிர்வரும் தேர்தலில் ஐ.தே. கட்சி வெற்றி பெற்று, ஆட்சியமைக்கும் என்பது உறுதியாகி விட்டதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

பதவிக்கு வந்தவுடன் புலிகளுடன் பேச்சு நடத்தி, இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் அலிஸாகிர் மௌலானா உறுதியளித்தார்.

இனவாதம் பேசிக்கொண்டிருக்கும் ஜே.வி.பி. போன்ற கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு இந்தத் தேர்தலுடன் மக்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் அவர் கோரினார். (ஒ-4)

### கிழக்கு மாகாணத்தில் கறுப்புப்பட்டிப் போராட்டம்

மூதூர்,ஒக்.30

மூதூரில் விடுதலைப் புலிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதலின்போது நடுவில் சிக்கிய மாணவர்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்து அம்பாறை ஒலுவில் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று கறுப்புப்பட்டிப் போராட்டம் ஒன்றினை நடத்தினர்.

நேற்றுக்காலை பல்கலைக்கழக முன்றலில் ஒன்று கூடிய சுமார் 500இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களின் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவாக தென்கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் நேற்று கறுப்புப்பட்டி அணிந்தவாறு பாடசாலைகளுக்குச் சென்றனர். (ஒ-4)

### மூதூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து, சமாதானத்தை வலியுறுத்தும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், பதற்ற சூழ்நிலை காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த குடும்பங்களை இன்று மீண்டும் அவர்களது சொந்த இருப்பிடங்களுக்கே அனுப்பிவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம், மூதூரில் தமிழ இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டதையடுத்து, அப்பகுதியில் தமிழர்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் மோதலில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பதற்ற நிலை உருவானது தெரிந்ததே. (உ-ஒ-4)

### காவலர் நியமனம்

யாழ். சிறைச்சாலைக்கு புதிதாக 30 சிங்களச் சிறைக்காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் உபாலி சமரவீர யாழ். சிறைச்சாலை அத்தியட்சகருக்கு அறிவித்துள்ளார்.(ஒ)

### கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுவெடித்த வேளையில் வாகன நடமாட்டம் அப்பகுதியில் நிறைந்திருந்தது. பாடசாலைகள் விடும் நேரமானதால் மாணவர்களும் அந்த இடத்தில் காணப்பட்டனர். பொதுமக்களும் நடமாடினர்.

குண்டுவெடிப்பில் ஏழு வாகனங்கள் சேதமடைந்தன. சேதமடைந்த வாகனங்கள் இடையே பாடசாலை மாணவர்களைக்கொண்ட வாகனங்களும் இருந்தன.

கொல்லப்பட்ட குண்டுதாரி பிஜாமா போன்ற கோர்ட்டும் காற்சட்டையும் அணிந்திருந்த ஒரு வாலிபர் எனக் கூறப்பட்டது.


பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலீஸார் சோதனைகளை மேற்கொண்டிருந்தபோது அங்கு வந்த வாலிபர் ஒருவரை நிறுத்தி விசாரிக்க முயன்றதாகக் கூறப்படுகிறது.

உடனே அந்த வாலிபர் ஓட்டம் பிடித்தார். பொலீஸார் அவரைப் பின்னால் விரட்டிச் சென்றுள்ளனர். சித்ரா லேன் வழியே ஓடிய வாலிபர் கிருள வீதியில் திரும்ப முயன்ற வேளையில் பொலீஸார் அவரை நெருங்கி விட்டனர்.

அச்சமயம் குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்தது. குண்டுதாரியின் உடல், தலை, கால்கள், கைகள் எல்லாம் சிதறிக்கிடந்தன.

குண்டுதாரி மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.

அவரைப் பிடிப்பதற்கு நெருங்கிக்கொண்டிருந்த - ஆனந்த் என்ற - கான்ஸ்டபிளும் குண்டுவெடிப்பில் உயிரிழந்தார். (உ-ஒ)




நன்றி:- 'த சண்டே ஐலண்ட்'

### வெளிநாட்டிலிருந்து 42 அவதானிகள் 12-ஆம் திகதி வருகை

கொழும்பு,ஒக்.30

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறும் பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 42பேர் அடுத்த மாதம் 12ஆம் திகதி கொழும்பு வருகின்றனர்.

ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 15 நாடுகளின் பிரதிநிதிகளே பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இங்கு வருகை தரவுள்ளனர். (உ)

### விடுதலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாமாகவே முன்வந்து 3 மாதகாலம் யுத்தநிறுத்தம் செய்தபோது அரசு அதற்கு ஆக்கபூர்வமான பதிலை வழங்கவில்லை. அத்தோடு நோர்வேயின் சமாதான முயற்சிகளும் தோல்வி யடைந்தன. இவற்றுக்குக் காரணம் என்ன?

*ஜனாதிபதி:-* பேச்சுக்கு ஏற்பாடு செய்யும் தரப்பாகத்தான் நோர்வே இன்னமும் உள்ளது. ஆனால் விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வரமறுக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு ஐ.தே. கட்சி தனிநாடு தரச் சம்மதித்திருப்பதால், அந்தக் கட்சியுடன் இணைந்து அமைதிப் பணியாற்றவே விரும்புவதாகப் புலிகள் கூறியுள்ளனர். எனவே அமைதி முயற்சிகளை அப்படியே நிறுத்திவைக்க விரும்புவதாகவும் புலிகள் கூறுகின்றனர் - என்றார். (உ-ஒ-4)

### மதுறுஓயா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட்ட மேலதிக இராணுவத்தினர் பயணித்த 'ட்ரக்' கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கிளைமோர் தாக்குதலில் 'ட்ரக்' வண்டி சேதமடைந்ததுடன், அதில் பயணம் செய்த சிப்பாய் ஒருவர் காயமடைந்து அநுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-4)

முக்கோணப் போட்டியின்

# இறுதியாட்டத்தில் நாளை யாழ். -வவுனியா மோதல்!

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களுக்கு இடையிலான முக்கோண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை காலை 9 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதும்.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் மாவட்டரீதியான தேசிய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆரம்பச் சுற்று ஆட்டங்களின் இறுதிப் போட்டியே நாளை நடைபெறவிருக்கின்றது.

ஐம்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டி ஆட்டங்களின் முதல் சுற்றில் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு மாவட்ட அணிகள் மோதின.

இவற்றில், சில ஆட்டங்கள் மழை காரணமாகக் குழம்பிய நிலையில் ஆரம்பச் சுற்றின் இறுதியாட்டத்துக்கு வவுனியா, யாழ். அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நாளை நடைபெறும் இறுதியாட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் கலந்துகொள்வார். (உ)

### தமிழகத்துக்கு ரணில் பயணம்

கொழும்பு,ஒக்.30

எதிர்வரும் வியாழக்கிழமை கண்டியில் இடம்பெறும் ஐ.தே.கவின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் அடுத்த வாரம் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தமிழகத்திற்கு செல்லவுள்ளார். தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தையும் ரணில் சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4)

### தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகள் மற்றும் உயிர்ப்பலி வாங்கும் நடவடிக்கைகளைத்0 தடுத்து நிறுத்து வதற்கு இஸ்லாமியர்கள் உதவ வேண்டும்.

தமிழீழ தேசம் விடுதலை பெறும் வரையில் ஸ்ரீலங்காவின் படை முகாம்கள் வடக்கு - கிழக்கில் எங்கிருந்தாலும் அவற்றைத் தாக்கியழிக்கும் நடவடிக்கைகளில் தீவிரத்துடன் செயற்படுவோம்.

- என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (உ-ஒ-4)


மலிவு விற்பனை

★ கைக்கடிகாரங்கள் (Wrist Watch)
★ சுவர் மணிக்கூடுகள்
★ மணிக்கூட்டு பற்றரி வகைகள்

அப்பு
எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/18900)



"முழு நிலாக் கருத்தரங்கு"

கருப்பொருள்:- "செயற்படுகின்ற / செயலிழந்த குடும்பம்"
கருத்துரை வழங்குபவர் :- அருட்சகோதரி இ.றீனா (Dip. in Counselling)
காலம் :- நாளை (31.10.2001) புதன்கிழமை
நேரம் :- பி.ப. 3.30மணி (இ.நே.)
இடம் :- "அகவொளி"
குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
- இயக்குநர்.
(94023)



விற்பனையாகிறது

கூட்டுறவுப் பரிசோதகர்
போட்டிப் பரீட்சை
வினா -விடைத் தொகுப்பு

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/18893)



இன்றைய ஓடியோ CD வெளியீடுகள்

★ நந்தா
★ அழகான நாட்கள்
★ பொன்னான நேரம்
★ சாஜகான்
★ 2001 கானா Remix

→ அழகிய வர்ணக் கவர்களுடன் பதிவு செய்யப்பட்ட CD (CD யில் படத்துடன்) கசற்றினைப் பெற்றுக் கொள்ளலாம்.
→ வீடியோ கசற்றில் உள்ள நிகழ்ச்சிகளை வீடியோ CDயில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

மூர்த்தி வீடியோ
மானிப்பாய். (C/18899)



The Barbara Mulvaney
Computer Training Center

பல்கலைக்கழக மாணவர்களின் Dissertation வேலைகள் தரமான முறையில் ஒரு கிழமைக்குள் செய்து கொடுக்கப்படும்.

Laser Printing per page (with Designing) - Rs 35.00
Dot matrix Printing per page (with Designing) - Rs 25.00

Address: UN Compound
123, Temple Road, Jaffna (Nearest to the ICRC Office)


## மரண அறிவித்தல்

### சண்முகராஜா சிறீஸ்கந்தராஜா

(போட்டோ சிறீ)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் குளப்பிட்டிச் சந்தி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராஜா சிறீஸ்கந்தராஜா நேற்று (29.10.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.
(C/18901)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.